www.tamilarangam.net

Raya

# தூண்டில்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE



TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 13

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அந்த மலையகம்.

ஆலையின் சங்கொலியில்
அவர்களின்
அவசர அணிவகுப்பு...

அது
ஆண்டாண்டுகளாய்
ஆட்கள் குறையாத
கணக்கு..

அவர்கள்
வெள்ளையர்கள்
வாசித்துப்போன பெயர்கள்.



உலகின்
தேனீர்த் தாகங்களுக்காக
தேயிலைக் கூடைகளை
முதுகில் தாங்கி
கேள்விக்குறியானவர்கள்.

இறப்பர்
தேயிலை மரங்கள்தான்
இவர்களின்
இலட்சியத் திறப்புகள்.

ஆனாலும் இவர்கள்
சில்லறைப் பூட்டுக்களால்
பூட்டப்பட்டவர்கள்.

காங்கேசன் கோவிந்குமார்...

www.tamilarangam.net

# மதவெறி

இலங்கையில் தீண்டாமையை உருவாக்கி, சாதிக் கலவரங்களைத் தூண்டி, பொதுமக்களின் பணத்தைச் சுரண்டி, மக்களை பிளவு படுத்திக்கொண்டிருக்கும் மதம் இப்போது வெளிநாடுகளில் தஞ்சம் கோரியிருக்கும் தமிழர்களையும் பயங்கரமாகப் பிடித்து வருகிறது. தான் பிடித்துள்ளவர்களுக்கு வழக்கமான முறையில் வெறியூட்டி வருகிறது. இங்குள்ள தமிழ் அகதிகள் மதத்தால் பிடிக்கப்பட்டு, சுய புத்தியிழந்து கொலைகாரர்களான சம்பவங்கள் கூட நடந்துள்ளன.

ஹானவ் என்ற நகரில் தமிழ்த்தாய் ஒருவர் தான் பெற்ற குழந்தையையே கழுத்தை நெரித்துக் கொலை செய்துள்ளார். அவருடைய கண்களுக்கு குழந்தை சாத்தானாகத் தெரிந்ததாம். சாத்தான் இருக்கும் வீட்டுக்கு கர்த்தர் வரமாட்டார் என்பதாலேயே இக்கொலை.

மேற்கு ஜேர்மனியின் இன்னுமொரு நகரத்தில் தமிழ் தகப்பன் தனது குழந்தையை இஸ்திரிக்கைப் பெட்டியினால் பொசுக்[illegible]. அவனுக்கும் குழந்தை சாத்தானாகத் தெரிந்ததாம்.

மதத்தின் வெறித்தனத்துக்கு இவற்றைவிட வேறென்ன ஆதாரங்கள் வேண்டும்? இந்தக் கொலைபாதகர்கள்தான் உண்மையான பக்தர்களென கொலைக்குக் காரணமான மதங்கள் பாராட்டியுள்ளன. இந்த விஞ்ஞான யுகத்தில் இருப்பவர்களை மதங்கள் எப்படியான காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கை முறைக்கு அழைத்துச் செல்கின்றன என்பதை இன்றும் கூடப் பலர் புரிந்து கொள்ளாமல் மதம், மதம் என்றலைவது வேதனையானது. இப்படியான மதங்களை தங்களுடைய இனத்துக்குள் பரப்பும் வேலையை இங்குள்ள சில தமிழ் அகதிகளே பொறுப்பேற்றிருக்கிறார்கள். இவர்கள் தங்களுக்கான வருமானத்தை இதில் தேடிக் கொள்வதுடன் மற்றவர்களின் அறிவைப் பொசுக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறியாமையை வளர்க்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார்கள். தங்களது தொழிலைச் சிறப்பாக நடத்துவதற்காக அவ்வப்போது இலங்கையிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் பலரைக் கூப்பிட்டு நகரங்கள் தோறும் "ஆவி எழுப்பும்" கூட்டங்கள் வைக்கிறார்கள். அதிசயம் நடக்கிறது, அற்புதம் நடக்கிறது என்று கவர்ச்சியாக விளம்பரங்கள் செய்கிறார்கள். வீடியோ நாடாக்களிலும், ஒலிப் பதிவு நாடாக்களிலும் கூட விளம்பரங்கள் செய்யப்படுகிறது. இவற்றைப் பார்த்து ஏமாந்து தமது மதியையிழந்த பலர் இவர்களுடன் சேர்ந்து தங்களுடைய நேரத்தையும் விரயமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி 'மதப் புகட்டல்' ஒரு புறமாக நடக்கும்போது மறு பக்கத்தில் 'மத மாற்றம்' என்ற வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஜேர்மனிய மத போதகர்களுடன் தமிழ் அகதிகளும் சேர்ந்து இந்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள். தங்களுடைய மதத்தில் புதிதாக தமிழ் அகதிகளைச் சேர்த்துக் கொள்வதற்காக பழைய உடைகளிலிருந்து வீட்டுத் தளபாடங்கள் வரையும், 50 டி.எம்மிலிருந்து 400 டி.எம் வரையும் இந்த மதவாதிகளால் சலுகைகளாக வழங்கப்படுகின்றன. 'இலவசம் என்றால் நஞ்சென்றாலும் பரவாயில்லை' என்ற மனப்பான்மையுள்ள பலரும் சலுகைகளுக்காக பல மதங்களில் தங்களை இணைத்துக்கொண்டு மதபோதகர்களோடு திரிகிறார்கள். தாங்கள் சார்ந்துள்ள மதங்களுக்கு ஆட்களைத் திரட்டுவதற்காகவும், தமிழர்களை வைத்து தங்களுடைய மதத்துக்கு விளம்பரம் செய்வதற்காகவும் தமிழ் அகதிகளை சலுகைகள் மூலம் ஏமாற்றிக் கொண்டிருப்பதாக இந்த மதவாதிகள் பெருமைப்பட்டுக்கொள்ளும் அதே நேரம் கிடைக்கும் சலுகைகளுக்காக எல்லா மதங்களிலும் சேர்ந்து இலாபங்களை அனுபவிப்பதன் மூலம் மதங்களையும், போதகர்களையும் தாம் ஏமாற்றுவதாக தமிழ்ப் பக்தர்கள் சந்தோசப்பட்டுக் கொள்கிறார்கள். தங்களுடைய செய்கைகளினால் இரு சாராருமே மதங்கள் போலி என்று நிருபிக்கும் ஒரே ஒரு நன்மையைச் செய்து வருகிறார்கள்.

கிறிஸ்தவ மதப் பிரிவுகள் இப்படியான முறைகளில் தமிழ் மக்களின் உணர்ச்சியை மழுங்கடித்து, அவர்களுடைய சுய புத்தியை இழக்கச் செய்து கொண்டிருக்கும் நேரத்தில், மதமாற்றங்களிலிருந்து தங்களுடைய மதத்தைக் காப்பாற்றுவதாக இந்துக்கள் வேறு விதமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மேற்கு ஜேர்மனியில் நகரங்கள் தோறும் சைவக் கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவற்றுக்கு ஊதிய அடிப்படையில் பூசகர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இலங்கையைப் போலவே இங்கும் சகல திருவிழாக்களும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றன. பூசை மற்றும் திருவிழாக்களுக்குத் தேவையான பொருட்கள் யாவும் இந்தியாவிலிருந்தும், இலங்கையிலிரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிதம் தருவிக்கப்படுகின்றன. இலங்கையில் இருக்கும் போது செய்ததைப் போலவே இங்கும் தங்களது நகைகளைக் காட்டவும், நவநாகரிக உடைகளைக் காட்டவும், பணப் புழக்கத்தைக் காட்டவும் 'பக்த கோடிகள்' கோயிலுக்குச் செல்கிறார்கள். அடுத்தவரைப் பற்றிய கதைகளெல்லாம் தாராளமாக கோயில்களில் அலசப்படுகிறது. விக்கிரகங்களை பணம் செலவழித்து இறக்குமதி செய்து, அவற்றுக்கு நகைகள் பூட்டலாம். இன்னும் சில நாட்களில் திருவிழாச் சண்டைகள் ஆரம்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவையெல்லாம் இந்த மதத்தைக் காக்கும் நடவடிக்கைகளாம்.

வெளிநாடுகளில் தங்களுடைய எதிர்காலத்துக்கு எந்தவித அத்திவாரமுமில்லாமல் தாய்நாட்டுக்குத் திரும்ப வேண்டிய நாளை எதிர்பார்த்து காத்திருக்கும் பிள்ளைகளுக்கு தாய் மொழியைப் போதிக்கும் கல்வி நிலையங்கள் எத்தனை நகரங்களில் இருக்கின்றன? பிள்ளைகள் தங்களுடைய தாய்மொழியில் அனைத்துப் பாடங்களையும் பயில்வதற்கு எத்தனை நகரங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? சிறார்களுக்கு கல்வி போதிக்க எத்தனை பேர் முன்வந்திருக்கிறார்கள்? தங்களுடைய பிள்ளைகளின் கல்விக்காக தங்களுடைய பணத்தைச் செலவழிக்க எத்தனை பெற்றோர் தயாராக இருக்கிறார்கள்? சிறார்களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை யாராவது தருவிக்கிறார்களா?

முக்கியமாக கவனிக்க வேண்டிய இத்தனை அவலங்களையும் பிரச்சினைகளையும் கைவிட்டுவிட்டு சலுகைகளுக்காக மதங்கள் மாறிக் கொண்டிருப்பதும், கோயில்கள், திருவிழாக்கள் என்று மதப் பித்துக் கொண்டலைவதும் நேரத்தையும் பணத்தையும் வீணாக்குவதும், சுயபுத்தியை இழப்பதும் தேவைதானா? ஆண்டவரே என்று தலையில் கை வைப்பதால் எங்களுடைய பிரச்சினைகள் தீரப் போவதில்லை. எங்களுடைய பிரச்சினைகளுக்கு நாங்கள்தான் தீர்வு காணவேண்டும். அதற்குதவ வேறு யாரும் வரப் போவதுமில்லை. அப்படி எதிர்பார்ப்பது எமது மடமையாகும். இதற்கு உதாரணமாக தற்போதைய இலங்கை நிலைமையை எடுத்துக் கொள்ளலாம்.

மதங்கள் எங்களுக்கு வேண்டாம். மனிதர்கள்தான் தேவை. அவர்களுடைய பிரச்சினைகள்தான் எங்களுக்கு முக்கியம். பிரச்சினைகளுக்கு நடைமுறைத் தீர்வை காண்பதில்தான் எங்களுடைய நேரம் செலவிடப்பட வேண்டும்.

மதம் என்று மதிகலங்கியவர்களுக்கு அறிவுரை சொல்ல வேண்டிய சில சஞ்சிகைகள் கூட மதத்துக்காக ஆசிரிய தலையங்கமும், ஆக்கங்களும் எழுதி மக்களை இன்னும் இருட்டில் தள்ளிக் கொண்டிருக்கின்றன. இப்படியான சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் 'முற்போக்கு' என்று வாயால் மட்டும் சொல்லிக் கொண்டிருக்காமல் தங்களுடைய பேனாக்களை மக்களின் விழிப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டும்.

மதங்கள் இங்கே இப்படியான பித்தலாட்டங்களைச் செய்து கொண்டிருக்கையில் இலங்கையிலிருப்பவர்களும், இங்கிருப்பவர்களும் சேர்ந்து புதிய சுரண்டலை ஆரம்பித்துள்ளார்கள். இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த அல்லது தரைமட்டமாக்கப்பட்ட இந்துக் கோயில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் என்பவற்றைப் புனரமைக்கவும், புதுப்பிக்கவும் இங்குள்ளவர்கள் தமிழ் அகதிகளிடம் பணம் சேகரித்து அங்கே அனுப்புகிறார்களாம். இலங்கையிலிருப்பவர்கள் இந்தப் பணத்துக்கு கல்லும், சீமெந்தும் வாங்கி ஆலயங்களைக் கட்டுகிறார்களாம். தேர் செய்யவும், கோபுரத்தை உயர்த்தவும், தேவாலயத்துக்கு சலவைக்கல் பதிக்கவும் என்று பணம் பிடுங்கப்படுகிறது.

இவ்வளவு உயிரிழப்புகள், சேதங்கள் ஏற்பட்ட பின்பும் பல தமிழர்கள் அறியாமையில்தான் இருக்கிறார்கள் என்பதை இந்த நடவடிக்கைகள் நிரூபிக்கின்றன. இலங்கை அரசு தனது அதிகாரத்தைப் பெறுவதில் கவனமாயிருக்க, இந்திய அரசு இயக்கங்களை விலைக்கு வாங்குவதில் அக்கறையாயிருக்க, இயக்கங்கள் தலைமைப் பதவிக்குப் போட்டி போட இவர்களின் விளையாட்டுகளுக்குப் பாவிக்கப்பட்ட மக்கள் தங்களது உழைப்பையும், உடமைகளையும் இழந்து அநாதரவாக நிற்கிறார்கள். இவர்களை யாரும் கவனிப்பதாக இல்லை. உழைப்பவர்களுக்கு தேவையான உபகரணங்களை வாங்குவதற்கோ, தங்குவதற்கு வீடுகள் கட்டுவதற்கோ, தொழிலே செய்ய முடியாமல் இருப்பவர்கள் சாப்பிடுவதற்கோ, எந்த உதவிகளுமில்லாமல் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமலிருப்பவர்களுக்காக நிதி சேகரித்து அனுப்பப்படாமல் ஆலயங்கள் கட்டுவதற்கு அல்லது சீர்ப்படுத்துவதற்கு பணம் சேகரிக்கப்படுகிறது. இங்கிருப்பவர்கள் நாட்டில் நடப்பவற்றைப் பார்க்க கண்ணில்லாமல் தங்களது கௌரவத்தைப் பறைசாற்றுவதற்காக பணம் சேர்க்கிறார்கள் என்றால் இலங்கையில் இருப்பவர்களுக்குக்கூடவா எது தேவை? எது தேவையில்லை என்று தெரியாமல் போய்விட்டது?

இப்படியே எமது அறியாமை தொடருமானால், அர்த்தமில்லாத செயல்கள் தொடருமானால், பயனற்ற விதத்தில் எமது நேரத்தையும் பணத்தையும் வீணாக்குவோமானால் நாம் மட்டுமல்ல, எங்களது சந்ததிகளையும் பின்னோக்கி அழைத்துச் செல்பவர்களாவோம்.

எனவே மதம் என்ற மாயையிலிருந்து விடுபடுங்கள். நடைமுறைப் பிரச்சினைகளைப் பாருங்கள். அவற்றுக்குத் தீர்வுகாண முயற்சி செய்யுங்கள். சமாளிக்க முடியாதவர்களுக்குத் தோள் கொடுங்கள். உதவியில்லாதவர்களுக்கு உதவுங்கள். நிச்சயம் முன்னேற முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுதந்திரக்குரல்

- ப.வி.ஸ்ரீரங்கன்

பூவுலகில் திரண்டிருக்கக்கூடிய அனைத்துத் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கும் வணக்கம்.

நடு வீதிகளிற் சாம்பலாக்கப்பட்ட நாம் மண் குழிகளுக்குள் புதைக்கப்பட்ட நாம், நீருக்குள் கல்லைக்கட்டி இறக்கப்பட்ட நாம் இதோ உங்கள் முன் பேசுகிறோம். தமிழர்களே எங்களை உங்களுக்குத் தெரியவில்லையா?

மரணவீட்டின் கோடியிலே, சஞ்சலமற்ற தெளிவான உலகத்திலே, போட்டி, பொறாமை, பதவியாசை, வஞ்சகம் சூது, களங்கமற்ற பொதுவுடமைப் பூமியிலே உலாவிக்கொண்டிருக்கும் எங்களை தமிழர்களே மறந்துவிடாமல் வாழ்வீர்களாக.

மஞ்சத்தில் விறலியுடன் துயிலுகிற தமிழர்களுக்கிடையில் நாம் துப்பாக்கிகளை அணைத்துக்கொண்டு வாழ்ந்தோம். குளிரூட்டப்பட்ட அறையில் கும்மாளமடிக்கும் தலைவர்களுக்கு மத்தியில் நாம் காடு, மேடுகளில் ஒளிந்து வாழ்ந்தோம். கூட்டம் போட்டு ஒப்பாரி விடும் தமிழர்களுக்கு மத்தியில் நாம் வீரத்துடன் போராடி மாண்டோம். போட்டியெனும் அரக்கனால் பொடிப்பொடியாக்கப்பட்டோம். தமிழர்களே இன்னுமா எங்களைத் தெரியவில்லை?

உங்கள் உயிரோடு உயிராகக்கலந்து உங்களை காப்பாற்றிய எங்களை, உங்கள் இதயத்தில் செல்லமாக "எங்கட பெடியன்கள்" என்று பதியப்பட்ட எங்களை வஞ்சக நெஞ்சம் படைத்த பேராசைக்காரர்களால் புறமுதுகில் குத்திச் சாய்த்துப் புதைக்கப்பட்ட எங்களை தமிழ்ச்சமுதாயமே நீ யுக யுகாந்திரங்களுக்கு எம்மை மறந்துவிடாமல் இருப்பாயாக.

உறக்கமின்றி உங்களைக் காத்தோம். பசியுடன் போராடி மண்ணைக்காத்தோம். நான்மறையறங்கள் ஓங்கும் நலமிகும் தமிழுக்காக நம் உயிரைக் கொடுத்தோம். களங்க மனத்தினரின் பதவி வெறிக்காக போராளிகள் நாங்கள் கொல்லப்பட்டோம். இலட்சியப் போராளிகளுக்கு மரணமில்லைப் பூவுலகில். போரிலே மாண்டால் வீரச் சுவர்க்கம் என்பீர்கள். நாங்கள் இருப்பது வீர சுவர்க்கத்தில்தான். இன்னும் இங்கு வராத நீங்கள் வருவதற்கு ஆயத்தமாகுங்கள்.

www.tamilarangam.net

ஏ சரித்திரம் தொலைந்த தமிழ்ச் சமுதாயமே பணத்தாசை, பதவியாசை, போட்டி, பொறாமையில் வாழும் தமிழருண்டு அவனியில். எனினும் தமிழீழம் என்கிற உறுதியை உயிர் போகும்வரையில் கடைப்பிடித்த எங்களை தினமும் நினைத்துக்கொண்டு இருப்பீர்களாக. எங்கள் மரணங்கள் புதிய சரித்திரங்களாக வரையப்படும்போது தமிழுக்குச் சரித்திரம் கிடைக்கக்கூடும்.

நியாயம் கேட்டால் சூடு விழுகிறது. உதவி புரிந்தால் உதை விழுகிறது. பொருள் தர மறப்போர் கடத்தப்படுகிறார்கள். வாயைத் திறந்தால் மரணம் அழைப்பில்லாமலேயே வருகிறது. ஆணவம் தலைக்கேறும்போது தலைவர்கள் மிருகமாகிறார்கள். ஞானமுள்ளவன் விரல் பட்டால் துப்பாக்கிகளும் ஜனநாயகம் பேசும். தினசரி நடக்கும் அராஜகங்கள் எங்கள் மரணத்தை உங்களுக்கு நினைவூட்டவில்லையா?

வீரத்தின் வெற்றியில், நெஞ்சுறுதியின் திண்மையில் தமிழ் உரிமைப் பேச்சில், மனிதநேயப் பூங்காவனத்தில் எங்கெங்கு நோக்கினும் அங்கெல்லாம் எங்கள் முகம் தெரியவில்லையா?

ஓ சுயநலக்கடலில் மூழ்கிய தமிழர்களே எங்கள் குரல் உங்கள் செவிகளுக்கு எட்டவில்லையா? வால் அறுந்த பட்டம்போல் சுற்றி, ஓய்ந்துவிட்ட மழைபோல் உறங்கும் தமிழர்களே எங்களை நோக்குங்கள். நாங்கள் கூறுவதைச் செவிமடுங்கள்.

சமாதானம் உங்களைத் தழுவ வரும்போது ஞானமுடன் அதை அணைத்துக்கொள்ளுங்கள். குண்டுமழை உங்களைச்சுற்றி விழும்போது மாளிகை எங்கே? மண் குடிசை எங்கே? மண் கிடங்கெங்கே? எல்லாம் மண்ணோடு மண்.

போட்டி வேண்டாம் தமிழர்களுக்கு. பொறாமையை கனவிலும் நினைக்க வேண்டாம். உழைப்பு தமிழீழ கோசம் ஒன்றே போதும். சண்டைக்கு வேறு களம் வேண்டாம். உங்கள் கோஸ்டிகளே போதும். மானம் வரட்டும் சரியான தமிழ்த் தலைவனுக்கு மட்டும். ஆத்திரப்படும் தமிழனைப் பார்த்துச் சிரியுங்கள். மண்ணுலகில் வாழுகின்ற வரையில் உங்கள் நெஞ்சில் தர்மம், நியாயம் சிந்தட்டும். திடம்கொள்ளுங்கள். உண்மை, நியாயம், கருத்துச்சுதந்திரத்திற்காக, மனித நேயத்துக்காக, தனிமனித சுதந்திரத்துக்காகப் போராடுங்கள். நாளை நாம் துப்பாக்கிகளுக்கு இரையாவது திண்ணம் என்றாலும் அதுவரைக்கும் நியாயத்திற்காகப் போராடுங்கள்.

காலம் போய்க்கொண்டிருக்கிறது. கொலைகள் மலிந்துவிட்டன. மரணம் கிட்ட வந்துவிட்டது. இதோ துப்பாக்கி முனை நீட்டப்படுகிறது. ஆகா வீர சுவர்க்கம் கிடைக்கப்போகிறது. கவலைகளை மறப்பதற்கு மரணம் கொண்டுவரும் துப்பாக்கி இதோ வந்துவிட்டது.

www.tamilarangam.net

ஓ தோழர்களே தயாராகிக் கொள்ளுங்கள். நெஞ்சினைத் திறந்து காட்டுங்கள். சன்னங்கள் உடலைச் சல்லடையாக்கட்டும். நியாயம் எங்கே? கேளுங்கள். உயிரை எடுத்துக்கொள்ளட்டும். மீட்டுங்கள் ஜனநாயகத்தை. பாருங்கள் மனித நேயத்தை. வீரர்களே கேளுங்கள். உங்கள் செவிகளிலே எங்கள் குரல்கள் வீரமெனும் உணர்வைத் தந்துகொண்டேயிருக்கும்.

பூமணம் பற்றி நெருப்பாகுது பாருங்கள். அருகினிலே தமிழன் மண்ணை அணைத்தபடி மாண்டு கிடக்கிறான். துப்பாக்கிக்கு வலிக்காது. அதை இயக்குபவனுக்கு...? ஆனாலும் உறுதியை விடாதீர்கள். நியாயத்துக்காக உங்கள் நெஞ்செனும் கதவைத் திறந்து வையுங்கள். கருமை கரைந்த வானில் கோலமிழந்து வந்திருக்கிறது கதிரவன். அது நடந்துவந்த வேளையில் விழுந்துவிட்ட உடல்கள் காக்கிப் புதைப்பாரின்றி கிடந்து நாற்றமெடுக்கிறது.

ஓ தமிழர்களே இவற்றை நீங்கள் கண்டும் காணாததுபோல் இருந்துவிட்டு கதவைத் தாழிட்டு கட்டி அழுகிறீர்களே பேடிகளா நீங்கள்? சுமை சுமையாக இரவு நெருங்குகிறது. பொழுது விடிகிறது. துணிவுள்ள தமிழர்களே உலகுக்கு வாருங்கள்.

இது ஈழம்தான். இப்போது பிணக்காடாகிவிட்டது. நீங்கள் காண்பதுதான் ஈழம். நிச்சயமாக இது ஈழம்தான்.. இரவு நீங்கள் பார்த்தீர்களே அதுதான் விடுதலை.

நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தினசரி வரும் மரணங்கள், தண்டனைகள். இது வெறும் கனவல்ல நிஜம்.

இவற்றைப் பொறுமையோடு தட்டிக் கேளுங்கள். இல்லையேல் மீண்டும் கொலைகள் விழும்...விழும்...விழும்.

---

ஆசிரியர்கள் தேவை!

கடந்த ஒரு வருடமாக எங்களால் நிர்வகிக்கப்பட்டுவரும் தமிழ் சிறார்களுக்கான பாடசாலைக்கு ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கிறெபெல்ட் நகரத்துக்கு அண்மையில் இருப்பவர்களாயின் விரும்பத் தக்கது. போக்குவரத்துச் செலவுகள் தரப்படும். மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள முகவரியுடன் தபால் மூலமாக அல்லது தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு முகவரி : Tamilengemeinde Krefeld<br>Marktstr 235<br>4150 Krefeld 1

தொலைபேசி : (02151)776115

தகவல்- ராஜன்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மேற்கு ஜேர்மன் பல்கலைக்கழக தமிழ் மாணவர் சேவை

இலங்கைத் தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக தன்னாலான பணிகளை மேற்கு ஜேர்மன் பல்கலைக்கழக தமிழ் மாணவர் சேவை செய்து வருகிறது. மேற்கு ஜேர்மன் பல்கலைக் கழகங்களில் இலங்கைத் தமிழ் மாணவர்கள் உயர் கல்வி பெற்றுப் பயனடைவதற்காக ஆக்கபூர்வமான அறிவுரைகளையும், தகவல்களையும் கொடுத்து ஊக்குவித்து வருகின்றது." மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

W.GUTSS
Nd.Ramstaedterstr 179 A/2
6100 Darmstadt




தேர்தலுக்கு முன்....

"உங்களை நம்பித்தான் இந்த நாடே இருக்கிறது. ஐயா காப்பாற்றுங்கள்"
!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெஞ்சமே மாறிவிடு

- தி.யே. அல்ஸ்ரான்

மண்ணுலகிற்கோர் கடிதம் எழுத
உனை நான் தேர்ந்தெடுத்தேன்
அருமை நண்பன் மகிழ்வாறு
நலமாக வாழ என
நலமோடு வாழ்த்துகின்றேன்

கண்ணியம் நேர்மை தவறாதே
வாழ்வின் சத்தியம் அதுவேதான்
உண்மை அன்பே குறிக்கோளாய்
வாழ்ந்திடும் நிலையில் தவறாதே





சகுனி நான் கூறுகின்றேன்
என் துன்பம் அறிய நீ வாய்ப்பில்லை
எனவேதான் இம் மடல் வரைகின்றேன்

நான் இங்கே நலமுற நிற்கின்றேன்
நீ அப்படித்தான் என்ணுகிறாய்
நலமே, அப்படி நான் இல்லை.
என் துயர் நான் சொல்லித் தெரியும்
என்பதும் உன் நிலையில்லை.

மண்ணுலகிலே
மதுவிலே நான் மயங்கியபோது
மௌனமாக நீ அணைத்தாய்.
மாதுவிலே நான் மயங்கியபோது
மாறாக நீ எதிர்த்தாய்.
மக்களை ஏமாற்றி வாழ்ந்தபோது
மறைந்து நின்று நீ தடுத்தாய்.

ஏமாறும் மக்கள் இருக்கின்றபோது
ஏமாற்றி வாழ்வதில் தவறென்ன?
ஏறி நின்று குதித்தாலும்
ஏற்றிப் பிடிப்பார்கள் தானே.

www.tamilarangam.net

மக்கள் அவர்கள் அல்ல
மந்தைகள் அவர்கள்.
மந்தைகள் எனதென்று
மகிழ்வுடன் நான் கூறிவைப்பேன்.
மந்தையின் கோல் போதும்
மகிழ்வுடன் தான் மயங்கி
மாறாமல் புள்ளியிடத் தெரிந்தவர்கள்
மாக்கள் அவர்கள்.

ஏமாளிகள் இருந்தால்தானே
வீரகாவியம் படைக்க முடியும்.
வாக்குறுதிகளை அள்ளி அளித்தேன்.
அரசியல் நாணயங்கள் அவை.
ஆசையுடன் கூரிய
கத்தியினால் தங்கள்
கைகள்தனைக் கீறினார்கள்.
வெற்றித் திலகம் இட்டார்கள்.
அத்தனையும் இரத்தத்தில்.
ஆசையுடன் ஏற்றேன்.
ஏமாறும் மக்களை நான்
ஏமாற்ற முடியும் என
எண்ணி நாளும் மகிழ்ந்திருந்தேன்.



பாடல்கள் இயற்ற நான் அறிந்திருந்தேன்.
அழகு மொழியில் பேச நான் தெரிந்திருந்தேன்.
என் 'உழைப்பு' சக்தியில் மக்களை மயக்கினேன்.

சிலவரிப் பாடலில் மதவெறியைப் புகுத்தினேன்.
பலவரிப் பாடலில் இனவெறியைப் பெருக்கினேன்
சாதியினைப் பிரித்து வைத்து அழகு பார்த்து
சாதுரியமாக நான் மோதவிட்டேன்.

மோதல்கள் வெடித்தன.
மோசமான நிலையில்
மோசம் போயின பல உயிர்கள்.
உயிர்கள் பலியாகியதில் சிறு கண்ணீர்த் துளி.
உதவியில் இதுவும் ஒரு நடிப்பு.
உபாயம் எனது இன்னதென இவர்கள் அறியாவிட்டால்
உயிர்கள் போவது இயற்கைதானே?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் சூதாட்டத்தில் இதுவும் ஒன்று,
அமைதி காண வழி உண்டென்றேன்.
அமைதி அமைதி என்றேன்.
அரசியல் சாசனத்தில் அதுவும் ஒன்று.

மக்களை ஏமாற்றப் பல வழி உண்டு.
மாந்தர் ஏற்கும் வழியில் அமைதியும் ஒன்று.
மாந்தர் பலர் மாலையுடன் சேர்ந்து நின்று
மாலையிட்டு வரவேற்றார் மகிழ்வு கொண்டு.
மக்களின் மயக்கத்தில் மலர்வு கொண்டு
மக்கள் தீர்ப்பு! தேர்தலில் நான் வெற்றி கண்டேன்.





பல தடவை அள்ளி அளித்த வாக்குறுதிகள்
சில தடவை சில, பல விலகச் செய்தேன்.
காலம் வரும் காற்றோடு போகும்
அதுவும் வாக்குறுதி.
சில பேரைப் பதவி பெறச் செய்யும்
அதுவும் வாக்குறுதி.
சில பேரை பதவி விலகல் செய்யும்
அதுவும் வாக்குறுதி.
வாக்குறுதியில் நான் கவிதை மேதை.
காலம் கடந்தபோது
கணிதம் தவறிவிட்டது.

அரசியல் சதுரங்கத்தில்
காய்கள் மாறிவிட்டன.
இளைஞர்கள் என்று சிலர்
களத்தில் வந்து விட்டார்.
மாறாட்டம் செல்லாக்காசு.
இருந்தும் அரசியல் மேதை நான் அல்லவா.
கற்ற வித்தை எல்லாம் சேர்த்து
ஒவ்வொன்றாக விட்டுப் பார்த்தேன்.
இளைஞரைப் பிரிக்க
செய்த சதி வெற்றி.
ஆனால்,
துப்பாக்கிகள் என்னை நோக்கி
ஒன்றன் பின் ஒன்றாக நீண்டன.

www.tamilarangam.net

மக்கள் இன்று மாறிவிட்டார்.
மாக்கள் என்று நான்நினைத்த
மக்கள் எல்லாம் மாறிவிட்டார்.
அவர்கள் மாக்கள் அல்ல
அறிவுகொண்ட மனிதர்கள்.
அரசியல் தெரிந்த மனிதர்கள்.
என் கணிதம் பிழைத்து விட்டது.

அறிவுகொண்ட மக்கள்
என்னைத் தெரிந்துகொண்ட வேளை
துப்பாக்கிக் குண்டொன்று பதம் பார்த்ததென்னை.
துர்ப்பாக்கிய நிலையில் நான் பிரிந்தேன்.

இன்று நான் மண்ணுலகிலும் இல்லை.
விண்ணுலகிலும் இல்லை.
மனிதனாய் வாழ்ந்தால் அன்றோ
மண்ணுலகில் வாழ்வதற்கு.
மக்களுள் தெய்வமாயிருந்தாலன்றோ
தேவனடி சேர்வதற்கு.



இடையிலே ஒரு சுவராம்.
அது பெரும் பாவச் சுவர்.
அதைக் கடந்து செல்வதற்கு
அங்கு தேவனை நான்
தேடி நின்றேன்.
தேவன் குரல் ஒலித்தது.
"உனை நான் அறியேன்" என்றார்.

என் இறைவா,
தேவ காவியம் நான் படித்தேனல்லோ.
நாள்தோறும் பூசை நான் செய்தேனல்லோ.
உனக்காக மாலைகள் நான் உருட்டி மகிழ்ந்தேனல்லோ.
என நான் பகர்ந்தேன்.

அத்தனையும் மக்கள் பணம்.
அவர்கள் துயர் தீர்க்கவில்லை.
உடலில் துணி ஏதுமில்லை.
யாரும் அற்ற அனாதையாய்
அவர்கள் நிற்க நீ எனக்கு
வானுயர கோபுரம் ஏன் வளர்த்தாய்?

www.tamilarangam.net

பால் ஊற்றி தேன் வார்த்து
பழவகைகள் ஏன் வைத்தாய்?
அழகான போத்தல்தனில்
பழரசமாம் காணிக்கை
எனக்கு ஏன் கொடுத்தாய்?
இறைவன் நானன்றோ.
உன்மனம் அறிவேனன்றோ.

அன்பு ஒன்றே என் சொத்து.
அதில் இணைந்து நிற்போர்க்கு
மதம் என்று ஏதுமில்லை.
இனம் என்று ஏதுமில்லை.
சாதி என்று ஏதுமில்லை.
அன்பு ஒன்றே என் கோவில்.
அதிலேதான் நான் வாழ்கின்றேன்.





மதம் என்ற பெயராலே
மதம் கொண்டு நீ நின்றால்
வேதம் கற்ற பயன் ஏதுமில்லை.
வேதியர்தான் யாருமில்லை.

வேதத்தை நீ படித்தாய்.
அன்பினை நீ உணரவில்லை.
அதனாலே என்னை நீ காணவில்லை.

வாழ்வின் இடையினிலே
ஆண்டவன் எங்கே?
எனக் கோசமிட்டாய்.
இதுவும் அரசியல்தான்.
நான் அறிவேன் உன் செயலை.

என்னுடைய நாமத்திலே
அன்புகொண்டு இணைந்தவரும்
கூட்டத்தோடுதான் நான் இருந்தேன்.
என்னை நீ பார்க்கவில்லை.
உன்னையும் நான் பார்க்கவில்லை.
"உன்னை நான் அறியேன்"
என்று இறைவன் சொன்னார்.

www.tamilarangam.net

ஆகையினால் இம் மடலை
விரைவாக நான் வரைந்தேன்.
என் கூட்டத்தை மாற்றிவிடு.
என்னை நீ மறந்துவிடு.
என் பேரையும் மறந்துவிடு.

இங்ஙனம்
பெயரையும் இழந்த
அநாதை.

---

# எமது கடமை

- ஸ்ரீதரன்

அண்மைக் கால இராணுவ நடவடிக்கைகளினால் நமது மண்ணில் எமது உடன் பிறப்புகள் பலத்த இழப்புகளுக்கும், இன்னல்களுக்கும் மத்தியில் உயிர் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுள் பலர் தமது உடமைகள், தொழில் போன்றவற்றை இழந்து வாழ்க்கையை தொடர்ந்து நடாத்துவதற்கு நாதியற்றவர்களாக இருக்கிறார்கள். இன்னும் பலர் தமது அவயவங்களை இழந்து அங்கக் குறைபாடுடையவர்களாக இருக்கின்றார்கள். இன்னும் சிலர் தமது உற்றார், பெற்றோர்களை இழந்து அநாதைகளாகியுள்ளார்கள்.

ஈழத்தில் உள்ள சில சமூக சேவை ஸ்தாபனங்கள் இவர்களுக்கு நிவாரண உதவியளித்து வருகின்றன. ஆயினும் நிதி பற்றாக் குறையினால் இவ்வுதவிகளை முற்று முழுதாக வழங்க முடியாத நிலை காணப்படுகிறது. இந்த ஸ்தாபனங்களில் அன்னையர் முன்னணியினது ஆதரவுடன் நடத்தப்படும் "ஜெய்ப்பூர் கால் திட்டம்" மற்றும் வடக்கு, கிழக்கு கிறிஸ்தவ பாதிரிமார் மிசன் ஆதரவில் நடைபெறும் 'அநாதைச் சிறுவர் மறுவாழ்வுத் திட்டம்' போன்றன குறிப்பிடக் கூடியன.

(தொடர்ச்சி 30ம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




26.11.88 (வீரகேசரி)

நாவலப்பிட்டி கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த புசல்லாவ சீ.சீ.தமிழ்மகாவித்தியாலயம் அண்மையில் தீக்கிரையானது. காரியாலயத்திலிருந்த முக்கிய பத்திரங்கள் எரிந்துவிட்டன.

கரமல்கொடையில் முன்னாள் கிராமோதயசபைத் தலைவரும், எம்பிலிப்பிட்டியவில் முன்னாள் ஐ.தே.க கிளைத் தலைவரும், அவருடைய மனைவியும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பலவத்தை சிறையிலிருந்த தென்னிலங்கைத் தீவிரவாதிகள் நூற்றுக்கு மேற்பட்டோர் தப்பியோடியதையடுத்து ஏனைய 300 பேர் பூசா முகாமுக்கு மாற்றப்பட்டனர். காலி, மாத்தறை, அம்பாந்தோட்டைப் பகுதிகளிலிருந்து 450 பேர் கைது செய்யப்பட்டு பூசா முகாமுக்கு கொண்டு வரப்பட்டனர்.

27.11.88 (வீரகேசரி)

15.10.88 - 15.11.88வரை நாடு முழுவதும் 1384 வன்செயல் சம்பவங்கள் நடந்துள்ளன. இவற்றுள் 445 கொலைகளாகும்.

30.11.88 (வீரகேசரி)

மாத்தறை மாவட்டத்தில் 28.11.88இல் எட்டுப்பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

23.11.88 இலிருந்து யாழ்குடா இருளில் மூழ்கியுள்ளது. அநுராதபுரத்திலுள்ள பாரிய மின்மாற்றி நிலையமொன்று பழுதடைந்துள்ளதால் மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது.

01.12.88 (வீரகேசரி)

வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணசபையின் ஆளுநராக முன்னாள் இராணுவத் தளபதி நளின்செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

மாத்தறை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் ஆண்தாதி ஒருவர் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

02.12.88 (வீரகேசரி)

இரத்தினபுரிப் பாடசாலைகளில் தற்காலிக இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

www.tamilarangam.net

பொலநறுவையில் ஈ.போ.ச பிரதம பாதுகாப்பு அதிகாரியும், அக்குரசவில் தந்தையும், 7வயது மகளும், அலுத்கமையில் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

05.12.88 (வீரகேசரி)

அம்பாந்தோட்டைப் பகுதியில் 8 சடலங்கள் மீட்கப்பட்டன.

06.12.88 (வீரகேசரி)

மாத்தளை மேல் டிவிசனில் கடந்த 83ஆம் ஆண்டு வன்செயலின்போது பாதிக்கப்பட்ட 83 தமிழ், முஸ்லீம் குடும்பங்களுக்கு இதுவரை எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

03.12.88 (வீரகேசரி)

பதுளை மாவட்டத்தில் வேலைக்குச் செல்லாதோர் பதவி விலகியதாகக் கருதப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1988ஆம் வருடத்துக்கான மூன்றாம் தவணை பாடசாலைகளில் 1989 மார்ச் மாதம்வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டுவிலில் இளம் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

04.12.88 (வீரகேசரி)

அம்பாந்தோட்டை, மாத்தறைப் பகுதிகளில் தொடர்ந்தும் அரிசி, மா, எரிபொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது.

பதுளை, பண்டாரவளை, அப்புத்தளை முதலான பகுதிகளை உள்ளடக்கிய தோட்டங்களில் வாழும் 50 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் உணவுப் பிரச்சினையால் பெரும் அவதியுறுகின்றனர். வேலைக்குச் செல்லாததால் இவர்களுக்கான உணவுப் பொருள் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்துடனான மோதலில் நெல்லியடி விடுதலைப்புலி இயக்கப் பொறுப்பாளர் தீசன் கொல்லப்பட்டார். புத்தூரில் நடந்த மோதலில் புலி இயக்கத்தைச் சேர்ந்த நடராசா கொல்லப்பட்டார்.

07.12.88 (வீரகேசரி)

மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் இலங்கை இராணுவத்தால் 400க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். நகரங்களிலும், கிராமங்களிலுமிருந்து கடத்திச் செல்லப்படும் இளைஞர்கள் பின்னர் எரியுண்ட சடலங்களாக வீதியோரத்தில் கண்டெடுக்கப்படுகிறார்கள்.

தெற்கில் அத்தியாவசியச் சேவைகள் சட்டத்தின் கீழ் வேலைக்குச் செல்ல மறுக்கும் அரச ஊழியர்களுக்கு அபராதம், சிறைவாசம் விதிக்கப்படுவதோடு சொத்துகளும் பறிமுதல் செய்யப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மினுவாங்கொடப் பகுதியில் 53 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

08.12.88 (வீரகேசரி)

பெலியத்தையில் நால்வரும், அரநாயகவில் ஒருவரும், குருநாகலில் இருவரும், தெகிவ ளையில் ஒருவரும், தெரணியகலயில் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

10.12.88 (வீரகேசரி)

சிங்களத்துடன் தமிழுக்கும் நாடெங்கும் அரசகரும மொழி அந்தஸ்து வழங்கும் அரசியலமைப்பின் 16வது திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் எதுவித எதிர்ப்புமின்றி ஏகமனதாக நிறைவேறியது.

தென்னிலங்கையில் ஒரு வாரத்தில் மட்டும் 30 தீவிரவாத இயக்கத்தினர் மக்கள் புரட்சிகர செம்படை (பிரா), பச்சைப் புலிகள் ஆகிய குழுக்களினால் கொலை செய்யப்பட்டுள்ளனர். மக்களைக் கொலை செய்தமைக்கான தண்டனைகள் என சடலங்கள் அருகே துண்டுப் பிரசுரங்கள் காணப்பட்டன.

11.12.88 (வீரகேசரி)

தொண்டமானாற்றில் இளம் பெண்ணொருவர் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டார்.

அச்சுவேலியில் புலிகள் இயக்கப் பெண் அங்கத்தவரான ரதிதேவி இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்.

பிரா இயக்கத்தால் தென்னிலங்கையில் 8 பேர் கொல்லப்பட்டனர்.

முருங்கனில் இந்திய இராணுவத்தால் 17 பேர் கைது செய்யப்பட்டனர்.

12.12.88 (வீரகேசரி)

தென்னிலங்கையில் எரியுண்ட நிலையில் 12 தீவிரவாத இளைஞர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவர்களின் கொலைக்கு பிரா இயக்கம் உரிமை கோரியுள்ளது.

வலப்பனை பகுதியில் மரணத்தையொட்டி நடைபெற்ற அன்னதான வைபவத்தில் பிரவேசித்த ஆயுதபாணிகளால் 9 பேர் கொல்லப்பட்டனர். 7 பேர் காயமடைந்தனர்.

13.12.88 (வீரகேசரி)

தென்னிலங்கையில் எரிக்கப்பட்ட 10 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. இக் கொலைகளுக்கு பிரா இயக்கம் உரிமை கோரியுள்ளது.

15.12.88 (வீரகேசரி)

சாவகச்சேரியில் ஒரு மாணவரும், பளையில் சின்னத்துரை குணரத்தினம் என்பவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

14.12.88 (வீரகேசரி)

அவசியமானால் சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்காக மேலும் கூடுதலான வெளிநாட்டுத் துருப்புகளை அழைப்பேனென்றும், பிரிட்டிஷ் இராணுவத்திலுள்ள கூர்க்கா படைவீரர்களில் ஒரு பிரிவினரை இலங்கைக்கு அனுப்புவது பற்றி அண்மையில் கேட்டிருந்தேன் என்றும் ஜே. ஆர் தெரிவித்தார்.

அக்குரஸ்ஸ, கம்புறப்பிட்டி, மாத்தறை பகுதிகளில் 24 மணித்தியாலத்தில் 17பேர் கொல்லப்பட்டனர்.

கடமைக்குச் செல்லாத தபால், தொலைபேசி ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கோப்பாயில் தம்பையா சிவகுமார் என்பவரும், யாழ்ப்பாணம் மினிபஸ் சேவைச் சங்கத் தலைவரும், சமூக சேவையாளருமான கந்தையா அரசக்கோன் என்பரும் சுட்டுக் கொல்லப்பட்டனர் .

16.12.88 (வீரகேசரி)

கிக்கெடுவையில் கணவன், மனைவி உட்பட 8 பேரை 30பேர் கொண்ட குழு சுட்டுக் கொன்றது.

கொக்குவிலில் இந்திய இராணுவத்தால் சந்திரன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பெரிய போரதீவில் இயக்க மோதலில் மூவர் கொல்லப்பட்டனர்.

திருகோணமலையில் இலங்கைப்படையினரால் ஐவர் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பில் இரண்டு டெலோ உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

நாவற்கேணியில் சந்திரசேகரன் என்ற புலி உறுப்பினர் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

17.12.88 (வீரகேசரி)

மொறவக்க பொலிஸ் பகுதியில் 7 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.
தென்மராட்சி கிழக்குப் பகுதியிலும், வட பகுதிக் கிராமங்களிலும் இந்திய இராணுவத்தால் மூவாயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். கண்ணிவெடி, கிரனேட் சம்பவங்கள் நடைபெற்றால் அப் பகுதி மக்கள் கொல்லப்படுவதுடன், வீடுகளும் எரிக்கப்படும் என இந்திய இராணுவம் எச்சரித்தது.

19.12.88 (வீரகேசரி)

நவம்பர் 16ஆம் திகதிக்கும் டிசம்பர் 14ஆம் திகதிக்கும் இடையில் வடக்கு, கிழக்கில் 69 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். தெற்கில் 82 அரசியல் கொலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தென்னிலங்கையில் கைது செய்யப்பட்ட 1,620 பேர் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

21.12.88 (வீரகேசரி)

இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று ஜனாதிபதியாக பிரேமதாச 50.43 வீத வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டார்.

பாராளுமன்றம் 20.12.88 இல் கலைக்கப்பட்டது.

கடந்த 4 மாதங்களில் நாட்டில் 1,791 பேர் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

பண்டாரவளையில் 8 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

22.12.88 (வீரகேசரி)

ஜனாதிபதி தேர்தலில் வடக்கு, கிழக்கில் 5 இலட்சம் பேர் வாக்களித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் ஒஸிக்குக் கூடுதலாகவும், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளில் பிரேமதாசவுக்கு கூடுதலாகவும் வாக்குகள் கிடைத்துள்ளன.

செட்டிகுளத்தில் சம்பவம்: 10.12.88

## சீதனப் பிரச்சினையினால் தாயும், 7 பிள்ளைகளும் நஞ்சுண்டு மரணம்

வவுனியா,

சீதனப் பிரச்சினை காரணமாக குடும்பத்திலுள்ள பெண்பிள்ளைகளை மணமுடித்துக் கொடுக்க முடியாது தாம் மனமுடைந்த விதவைத் தாய் ஒருத்தியும் அவரது 7 பிள்ளைகளும் நஞ்சு உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டனர்.

துயரம் நிறைந்த இச் சம்பவம் செட்டிகுளம்பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. தற்கொலை செய்து கொண்ட தாயாரின்வயது 42. பரணமானோரில் 18 வயதும், 16வயதும் நிரம்பிய இளம் பெண்கள் உட்பட வயது கடந்தும் இன்னும் மணமாகாத பெண்களும் அடங்குவர்.

இக்குடும்பத்தின் தலைவன் சில மாதங்களுக்கு முன்னர் காலமானார். அதன் பின்னர் இவர்கள் மிகுந்த வறுமைக்கு உள்ளாகினர். பெண்களின் திருமணங்கள் சீதனப்பிரச்சினையினால் தடைப்பட்டதால் இக் குடும்பத்தினர் மனமுடைந்து இருந்தனர் எனச் சொல்லப்படுகிறது.

நஞ்சு உட்கொண்டு விட்டு அனைவரும் கிணற்றில் குதித்தே தற்கொலை செய்து கொண்டுள்ளனர். சம்பவம் இடம்பெற்ற நேரம் மேற்படி விதவைத் தாயாரின் ஒரு மகன் வீட்டில் இருக்கவில்லையாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகச் செய்திகள்

தொகுப்பு த.பூபாலச்சந்திரன்

(மார்கழி மாத வானொலி, பத்திரிகைச், சஞ்சிகைச் செய்திகள்)

நேபாளத்திலிருக்கும் பத்தாயிரத்துக்கும் அதிகமான திபெத் அகதிகளில் 26பேரை திரும்பவும் சிறை அதிகாரிகளிடம் ஒப்படைத்திருப்பதாக நம்பப்படுகிறது. இவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றித் தகவலில்லை. இது பற்றி சர்வதேச நிறுவனங்களுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

11 மாதத் தவணைக்குள் அமெரிக்க, ஜேர்மன் யுத்த கவசவாகனங்களைவிட அதி திறமான கவச வாகனங்களை உற்பத்தி செய்து தர வேண்டுமென இங்கிலாந்தின் பாராளுமன்ற அமைச்சர் இங்கிலாந்திலிருக்கும் விக்கர் என்ற கம்பெனிக்கு அவகாசம் கொடுத்துள்ளார். அப்படிச் செய்யத் தவறினால் அமெரிக்காவின் உற்பத்திகளை வாங்கப் போவதாகவும் இதனால் 1,000 பேர்வரை வேலை இழக்க வேண்டிவரும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

கிழக்கு ஐரோப்பாவிலிருந்து மேற்கு ஜேர்மனிக்கு வந்த அகதிகளில் 60பேர் ரஷ்யாவுக்காக உளவு பார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

மேற்கு ஜேர்மனியிலிருக்கும் 'ப்பிளெஸ்' அணு உலை நிலையத்தில் கடந்த வருடம் கசிவு ஏற்பட்டதை அரசாங்கம் மறைத்திருந்தது. இதில் வேலை செய்த இருவர் இரத்தப் புற்று நோய் ஏற்பட்டு இறந்த பின்னர் இச் சம்பவம் அம்பலப்பட்டுள்ளது.

நெதர்லாந்திலிருக்கும் 'பயர்' இரசாயன நிறுவனத்தின் வடிகட்டு வெடித்தமையினால் வெளியாகும் நச்சு வாயு றைன் நதியுடன் கலக்கப் போவதாகவும், அந்த நீரை மக்கள் அருந்த வேண்டாம் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டது. பின்னர் இந்த ஆபத்து விலக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கியநாட்டு அறிக்கைளின்படி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் கடந்த 12 மாதங்களில் 5 இலட்சம் பிள்ளைகள் இறந்துள்ளார்கள். வெளிநாடுகளில் வாங்கிய பணத்தை இந்த நாடுகள் திருப்பிக் கொடுக்காமையினால் மறுபடி கடன் கொடுக்க ஏனைய நாடுகள் மறுத்தால் ஏற்பட்ட வறுமையே இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பியர் அல்லாதோரை வெறுக்கும் 'ஸ்கின் கெட்' இயக்கம் இங்கிலாந்து, அமெரிக்கா, கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், சுவீடன் ஆகிய நாடுகளில் வளர்ச்சியடைந்து வருகிறது. இவர்கள் கிட்லரின் கொள்கைகளை கடைப்பிடித்து வருகிறார்கள். சுவீடனில் மட்டும் 1,500 பேருக்கு மேல் அங்கம் வகிக்கிறார்கள். மேற்கு ஜேர்மனியில் வெளிநாட்டவர்களுக்கெதிராக இவர்களால் பல தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதுவரை அமீனியாவில் 1 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பூகம்பத்தால் இறந்துள்ளனர். பல இலட்சக்கணக்கான மக்கள் காடுகளுக்குள் ஓடியுள்ளனர். பலவீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

மேற்கு ஜேர்மனியிலிருக்கும் என்.ரி.ஜி நிறுவனத்திலிருந்து இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்காவுக்கு அணு தொழில் நுட்பங்களை திருட்டுத்தனமாக விற்றதாக விசாரணை நடைபெறுகிறது.

சீனாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் சீன மாணவர்களும், ஆபிரிக்க மாணவர்களும் மோதிக் கொண்டனர். இதில் பலர் காயமடைந்தனர்.

இலங்கையிலிருந்து 500 மைல் தொலைவில் சைபிரசுக்கு சொந்தமான எண்ணெய் கப்பல் ஒன்று தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கிறது.

இந்தியப் பிரதமர் ராஜீவின் பாகிஸ்தான் விஜயத்தின்போது, இரு நாடுகளுக்கும் இடையில் யுத்தமேற்படும் பட்சத்தில் ஒருவர் மற்றவரின் அணு உலை நிலையங்களைத் தாக்குவதில்லையென ஒப்பந்தம் செய்யப்படும்.

பங்களாதேசில் பிரயாணிகள் கப்பலும், எண்ணெய்க் கப்பலும் மோதிக் கொண்டதில் 100 பேர் காணாமல் போயுள்ளனர்.



www.tamilarangam.net

# சில குறிப்புகள்

ஒவ்வொரு மாதமும் கலை, இலக்கியங்கள், தகவல்களைத் தேடித் 'தூண்டில்' போடும் எங்களுடன் உங்களையும் சேர்ந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம். தூண்டிலில் காத்திரமான, ஆரோக்கியமான, தரமான ஆக்கங்களைச் சிக்க வைப்பது உங்களது பொறுப்பே. தூண்டிலுக்கு ஆக்கப் பஞ்சம் ஏற்படாமல் கவனித்துக் கொள்ளுங்கள்.

தூண்டிலுக்கு அனுப்பப்படும் ஆக்கங்கள் முழுத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டிருத்தல் விரும்பத் தக்கது. ஆக்கங்களை அனுப்புபவர்கள் தங்களுடைய சொந்தப் பெயர், முகவரிகளைத் தெளிவாக எழுத வேண்டும். சொந்தப் பெயரிலா, புனை பெயரிலா ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

உங்கள் ஆக்கங்களுக்கான தலைப்புகளையும், பிரசுரிக்க வேண்டிய பெயரையும் நீங்களே அழகான கையெழுத்தில், பொருத்தமான அளவுகளில் எழுதியனுப்பலாம். உங்கள் ஆக்கங்களுக்கான சித்திரங்களையும் நீங்களே வரைந்து அனுப்பலாம்.

தூண்டிலில் இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் சிறுகதை, கவிதை போன்ற குறிப்பிட்ட பகுதிகள்தான் தொடர வேண்டும் என்றில்லை. உங்கள் மனதில் தோன்றும் புதிய அம்சங்களையும் அனுப்பி வையுங்கள். பொருத்தமானவை நிச்சயம் சேர்த்துக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு நகரங்களிலுமிருக்கும் தூண்டில் வாசகர்கள் தாங்களே நிருபர்களாக மாறி தங்கள் நகரில் நடக்கும் செய்திகளையும், தமிழர்களுடன் சம்பந்தப்பட்ட தகவல்களையும் அனுப்பி வைக்கலாம். இதே போல் ஏனைய நாடுகளிலுள்ள வாசகர்கள் தங்கள் நாடுகளின் செய்திகள், அங்கிருக்கும் ஈழத்தமிழர்களின் வாழ்க்கை முறைகள் பற்றி எழுதியனுப்பினால் ஏனைய தூண்டில் வாசகர்களும் இந்த விடயங்களை அறிந்து கொள்வார்கள்.

தூண்டிலைப் படிப்பதுடனும், ஆக்கங்களை அனுப்புவதுடனும் மட்டும் நின்று விடாமல் தூண்டிலைப் பற்றிய முழுமையான விமர்சனங்களையும் அனுப்பி வையுங்கள். தரமான ஆக்கங்களைப் பாராட்டி ஊக்குவிப்பதுடன், தவறுகளைச் சுட்டிக் காட்டி திருத்துவதும் உண்மையான வாசகரின் கடமையாகும்.


வாசகர்களின் ஆர்வம் சஞ்சிகை வளர்ச்சிக்கு அவசியமாகும்.

– கடலோடிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கனவை மிதித்தவள்

**- பார்த்திபன்**

வேலைத்தளத்திலிருந்து எல்லோரும் கலகத்தபடி வெளியே வந்தார்கள். கட்டிடத்திலிருந்து பாதைக்கு வந்ததும் அருகில் வசிப்பவர்கள் விடைபெற்று நடந்து போக, ஏனையோர் தாங்கள் பிரயாணிக்கப் போகும் திசைகளுக்கேற்ப எதிரெதிர் பஸ் தரிப்பு நிலையங்களில் நின்று கொண்டார்கள்.

"என்ன ஒரு மாதிரி இருக்கிறீர்? சுகமில்லையே?" சுதா மீனுவின் முகத்தைப் பார்த்துக் கேட்டாள்.

"எனக்கென்ன வருத்தம். இந்தச் சனங்களை நினைச்சாத்தான் மண்டை வெடிக்குது" என்றாள் மீனு.

அதன்பின் பஸ் வரும்வரை இருவரும் கதைக்கவில்லை. பக்கத்தில் வேறு ஆட்களும் நின்றார்கள். பஸ்ஸில் ஆட்களில்லாத தனிமைப்பட்ட இருக்கைகளில் இருவரும் அமர்ந்து கொண்டதும் மறுபடி உரையாடல் ஆரம்பித்தது.

"அவை கதைச்ச கலியாணக் கதையைப் பற்றியே நினைச்சுக்கொண்டிருக்கிறீர்?"

"அதேதான். தங்களைச் சுத்தி ஒண்டும் நடக்காத மாதிரி இப்பிடி எல்லாம் கதைக்க இவைக்கு எப்பிடி மனம் வருகுதெண்டு எனக்கெண்டா தெரியேல"

"அவைகளைப் பிழை சொல்லாதையும். எங்கட சனம் முழுக்க அப்பிடியேதான் இருக்கு. பொருளாயும், உயிராயும் தான் இழந்திருக்கினமே தவிர

தொடர்கதை 37



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேறெந்த விதத்திலயும் மாறேல. அப்பிடி மாத்தக் கூடிய மாதிரி ஏதேன் நடந்ததே? இல்லைத்தானே. பிறகேன் சனத்தைக் குறை சொல்லுவான். தற்சேலா சனங்கள் மாறினாலும் இப்ப இருக்கிற கன பேருக்கு அது நட்டமாய்ப் போடும்" சுதா உண்மையைத் தெரிவித்தாள்.

"உண்மைதான். போனமாதம் நடந்த விசயம் கேள்விப்பட்டனீர் தானே? செட்டிக்குளத்தில தாயும், ஏழு பிள்ளையளும் நஞ்சு குடிச்சு செத்திருக்கினம். ஏன் தெரியுமே? சீதனப் பிரச்சினை. இன்னொரு ஊரில மச்சானும், மச்சாளும் வேலிக்கான்டி பொல்லுகளால அடிபட்டிருக்கினம். பிரச்சினையள் எக்கச்சக்கமா இங்க இருக்க எங்கட ஆக்கள் வேற எங்கயோ நிக்கினம். மரத்தை விட்டிட்டு கொப்பு வெட்டிக் கொண்டிருக்கினம்" மீனுவின் குரலில் ஓரளவுக்கு துடிருந்தது.

"அப்பிடிக் கொப்பை வெட்டினாலும் கொஞ்சம் பறவாயில்லையே. அங்கங்க இலட்சம் இலட்சமா சீதனத்தைப் புடுங்கிக்கொண்டு கலியாணங்கள் நடக்குது. பொம்பிளைமார் சீதனத்தையும் கொண்டு வெளிநாட்டு மாப்பிளையவிட்டப் போய்க் கொண்டிருக்கினம். இதுகளைப் பற்றி யோசிப்பமெண்டில்லை. கலியாணம் நடந்து முடிஞ்சாப் பிறகு குடுத்த சீதனத்துக்கு ரக்ஸ் வேண்ட வருயினம். போராடுறதுக்கு இந்த ரக்ஸ் வேணுமாம். எல்லா வழியாலயும் உழக்குப்படுறது அடிமட்டத்தில இருக்கிற சனங்கள்தான். எல்லாத்திலயிருந்தும் தப்பிற வசதிதான் மேல்மட்டத்தில தாராளமா இருக்கே"

அவர்களுடைய இருக்கைகளுக்கருகே வேறு பிரயாணிகள் வந்தமர்ந்தபோது அவர்களுடைய பேச்சு இடைநிறுத்தப்பட்டது. ஜன்னலால் வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சீராகப் போய்க் கொண்டிருந்த பஸ் திடீரென வேகம் குறைந்து பாதை நடுவில் நின்றுவிட்டது. பயணிகள் "என்ன?" வென்று அந்தரப்பட்டு ஜன்னல்களினூடாகவும், தலையை நீட்டியும் வெளியே பார்த்தார்கள்.

பாதைக்குக் குறுக்கே ஆட்கள் நிறைந்திருந்தார்கள். எதையோ பார்க்க பலர் முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள்.

"என்னவாம்?"

"என்னவாம்?"

பலர் பஸ்ஸிலிருந்து இறங்கிப் போய் புதினம் விசாரித்தார்கள். சுதாவும், மீனுவும் ஜன்னலூடாக தலையை வெளியே நீட்டினார்கள்.

"என்ன நடந்தது?" சுதா பாதையில் நின்ற பருத்த மனிதரைப் பார்த்துக் கேட்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

"அரோ ஒரு பெடியனைச்சுட்டுப் போட்டுக் கிடக்கு"

இருவரும் தலையை உள்ளே இழுத்துக் கொண்டார்கள். இருக்கையில் அமர்ந்து ஒருவரை ஒருவர் பார்த்தார்கள்.

பஸ் சாரதி தான் விபரங்களை அறிந்து கொண்டதும் மறுபடி மெதுவாக பஸ்ஸை நகர்த்தினார். இறங்கிப் போயிருந்தவர்கள் ஓடிவந்து ஏறிக்கொண்டார்கள்.

"சின்னப் பெடியனா இருக்கிறான்"

"சுட்டுக் கொல்லுறதுக்கு வயது விசாரிக்க வேணுமே?"

"இந்தியனாமியோட வந்த தமிழ்ப் பெடியள்தானாம் சுட்டவங்கள். ஆமி சுடேலயாம்"

"எல்லாம் ஒரு நாட்டுப் பற்றுத்தான்"

"செத்த பெடியன் எதிரான இயக்கமோ?"

"சிலவேளை இயக்கங்களைப் பற்றிக் கதைச்ச சும்மா பெடியனாயும் இருக்கலாந்தானே?"

"ஆர் பெத்த பிள்ளையோ?"

"என் வாயைத் திறப்பான்"

சுதா, மீனுவுக்குப் பின்னால் இருக்கைகளில் அமர்ந்திருந்தவர்கள் தாங்கள் அறிந்த புதினங்களைப்பரிமாறி முடித்தபின் தங்களுடைய பிள்ளைகளை எந்த நாட்டுக்கு அனுப்பலாம் என்பதை பற்றி ஆலோசித்தார்கள்.

தங்களது தரிப்பில் இறங்கியதும் மீனுவும், சுதாவும் மறுபடி ஆரம்பித்தார்கள்.

"பாத்தீரே? கேள்வி கேக்க ஆளில்லாம அவனவன் தன்ரை விருப்பப்படி சுட்டுப்போட்டுப் போறான்" என்றபோது மீனுவின் குரலில் துக்கம் இருந்தது.

"இதுதான் இன்டைய நாட்டு நடப்பு. வசதியிருக்கிறவை என்னவும் செய்யலாம். உதாலதானே தாய், தகப்பன் பிள்ளையளின்ரை படிப்பையும் இடையில நிப்பாட்டிப்போட்டு வெளிநாட்டுக்கு அனுப்பிக் கொண்டிருக்கினம். படிச்சவையும், படிக்கக்கூடியவையும் நாட்டைவிட்டுப் போய்க் கொண்டேயிருக்கினம். இங்க இருக்கிறவையும் இப்ப வடிவா படிக்கேலாம இருக்கு. இப்பிடியே போனா என்ன நடக்கப் போகுது?"

www.tamilarangam.net

"சைபர்தான்" மீறு விரக்தியாகச் சிரித்தாள்.

தன்னுடைய வீடு வந்ததும் "நாளைக்குச்சந்திப்போம்" என்றசுதா பிரிந்தாள்.

தனியே வீடு நோக்கிப் போகும் போதும் மீறு யோசித்துக்கொண்டிருந்தாள். எல்லாவற்றையும் நினைக்கும்போது அவளுக்கு மண்டை வெடித்து விடும் போலிருந்தது.

இரவு சாப்பிடும்போது அம்மாவுக்கு எல்லாம் சொன்னாள். விசாலம் சாப்பாட்டைப் பரிமாறியபடி மகளைப் பார்த்தாள். வீட்டின் ஆண்மகன் வெளிநாட்டிலிருக்க பெண்பிள்ளை வேலைக்குப் போய் வருவதை நினைக்க அவளுக்குத் துக்கமாயிருந்தது.

'எல்லாம் என்ரை தலையெழுத்து. வீட்டில இருந்த ஒரே ஆம்பிளையையும் வெளியால அனுப்பினம். என்ரை குஞ்சுவையும் கொண்டு போட்டாங்கள். மிஞ்சினது இவள்தான். இவளும் நான் முழுக்க வேல செய்து தேஞ்சு கொண்டிருக்கிறாள். என்னவெல்லாமோ நடக்கிற நேரத்தில வேலக்கு போய் வாறாள். உப்பிடி ஆருக்காண்டி உழைக்க வேணும்?

மீறு இனித்தானே வாழப் போறாள். நான் அவளுக்கென்ன சேத்தே வைச்சிருக்கிறன். உதவிக்கு ஆருமில்லாட்டித்தன்னைத் தான்தானே பாக்க வேணும். தனக்காண்டி அவள் உழைக்கட்டும். காசைச் சேத்து தனக்கென்டொரு வாழ்க்கையை அமைக்கட்டும்.

என்னத்தை நினைச்சு செய்யிறது? எல்லாம் நாங்க நினைக்கிறபடியே நடக்குது? என்ரை மஞ்சுவுக்கு உப்பிடி நடக்குமெண்டு நான் கனவு கூடக் காணேலயே' என்று நினைக்கும்போது விசாலத்துக்கு கண்ணீர் எட்டிப் பார்த்தது.

அம்மாவின் முகத்தைப் பார்த்தே அவள் மஞ்சுவைப் பற்றி நினைக்கிறாள் என மீறு புரிந்து கொண்டாள். அவளுக்கு இது பழக்கமாகிப் போய் விட்டது. கண்ணீர் இல்லாமல் அவள் அம்மாவைப் பார்க்கும் நேரம் குறைவு.

மீறு சாப்பாட்டை முடித்துக் கொண்டு படுக்கையறைக்கு வந்து புத்தகமொன்றை விரித்தாள். எழுத்துகள் பதியச் சிரமப்பட்டன. மூளையெங்கும் கேள்விகள். கேள்விகள்.

'இப்பிடியே நிலமை இருந்தா என்ன நடக்கும்?'

'கடைசியா சைபர்தானா?'

(இன்னும் வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

ஒவ்வொருவரது ரசனையும் வேறுபட்டது. ஆனால் விமர்சனம் வேறு. ஒரு கலைப்படைப்பை விமர்சனம் செய்யும்போது அதனைப்பற்றி நன்கு விளங்கிக்கொண்டு விமர்சிப்பது மிக முக்கியமானது. எனது "தீயின் வார்ப்புகள்" புதுக்கவிதையை விமர்சகர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதை என்னால் உணரமுடிகிறது. சீதனப்பிரச்சனையை அடிப்படையாகக் கொண்டு அப்படைப்பு எழுதப்படவில்லை. ஈழத்து மண்ணிலிருந்து ஒலிக்கும் ஒரு பெண்ணின் கண்ணீர் கலந்த குரலே அக்கவிதை. ஆனால் சீதனப்பிரச்சனை பற்றி எந்த வரியிலோ நான் அதில் குறிப்பிடவில்லை. நரம்பில்லாத நாக்கால் வரம்பில்லாமல் பேசும் ஒரு சில இளைஞர்களை விழிப்படையச் செய்யவே அதனை வரைந்தேன்.

ஈழத்து மண்ணில் புனிதப்போராட்டம் நடந்து கொண்டிருக்கின்ற வேளை ஒரு சில பாவச்செயல்களும் இடம்பெற்றுக் கொண்டுதானிருக்கிறது. கொலை, கொள்ளை, பாலியற் பலாத்காரம் போன்றவற்றால் மக்கள் குறிப்பாகப் பெண்கள் எதிர்நோக்கும் இன்னல்களை நாளாந்தம் நாம் அறிந்துகொண்டுதானிருக்கிறோம். இவ்வாறான இன்றைய சூழ்நிலையில் சிக்கித் தவிக்கும் ஒரு இளம் பெண்ணின் தவிப்பின் பதிப்பாகவே அப்புதுக்கவிதை பிரசவமானது.

சுகவாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கும் நம் இளைஞர்கள் ஈழப்போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொள்ளாததுடன் இன்றைய சூழ்நிலையில் பெண்கள் அனுபவிக்கும் இன்னல்களைப் புரிந்துகொள்ளாது ஈழத்துப் பெண்களைக் குறைகூறுவதை கவிதையின் நாயகி சாடுகிறாள். இதனால் அவர்களைச் சிந்திக்கத் தூண்டுகிறாள். இதுவே கவிதை வெளிப்படுத்தும் கருத்தும் தீர்வும்.

பக்கம் சார்ந்த கற்புமுறை உள்ள சமுகத்திலிருந்து பெண்கள் தம்மை விடுவிக்க வேண்டிய அவசியம் கவிதையில் வெளிப்படுத்தப்படுகிறது.

மேலும் இன்றைய ஈழத்தில் ஆண்களின் தொகை அருகிக்கொண்டு வருகிறது. அதிலும் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டோர் தொகை இன்னும் சொற்பமே. இந்த வேளையில் பெண்களும் தங்களைப் போராட்டத்துடன் இணைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதுவே சூழ்நிலை. ஒவ்வொரு காலச்சூழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலைகளின் பிரதிபலிப்பாகவே இலக்கியங்கள் எழுகின்றன. உயிருக்கு மேலாக கற்பை பாதுகாக்கும் தமிழ்ப் பெண்கள் தானுகக் கற்பைப்பறி கொடுக்கச் சம்மதிப்பார்களா? அவர்கள் உயிர்வாழும்வரை கற்போடு வாழவே போராடுவார்கள். இதுவே நிதர்சனம். இதையே

"தீயில் கறையிருப்பதில்லை
அதனுற்தான் இன்னும்
சீதையும் கண்ணகியும்
வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டேன். எனவே நன்கு கவிதையைப்படித்து புரிந்து கொண்டு விமர்சனம் செய்வதுதான் சிறந்தது. சாண்டில் எவருக்கும் சொற்சிலம்பமாடக் களம் அமைத்துத் தரவில்லை. சரியான பார்வையும், பொறுப்புணர்வும் ஆசிரியர் குழுவுக்கு இல்லாமலுமில்லை. ஆரோக்கியமான விமர்சனங்களே படைப்பாளிகளுக்கு சான்றுகோலாக அமையும்.

றெம்சைட் — அம்பலவன் புவனேந்திரன்.

சாண்டில் கலம் 12இல் மனிதம் எங்கே என்ற கட்டுரை தொடர்பான விக்குவின் விமர்சனத்திற்கு தங்களால் அளிக்கப்பட்ட பதில்கள் குதர்க்கமானவை. உண்மைக்குப் புறம்பானவை. இது உங்களை நீங்களே திருப்திப்படுத்தத்தான் உதவும். இன்று 90 வீதத் தமிழ் மக்கள் சிங்களப் பாசிசக் கொடுமையிலிருந்து விடுபட்டுத் தனித்து தன்மானத்துடன் வாழத்தான் விரும்புகிறார்கள். இந்த கொள்கை எட்டப்பர்கள் கூட்டுடன் இந்திய இராணுவம் இலங்கையில் நுழைந்து சில ஆயிரம் உயிர்கள் அழிந்தபின்பும் கூட மேலோங்கி நிற்கிறது. இது தான் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழும் 90 வீதத் தமிழ் மக்களின் உண்மை நிலை என்பதை மறந்து விடாதீர்கள்.

சுதந்திரப் போராட்ட நாடுகளில் பல ஆயிரம் பேர் அழிந்தும் இறுதியில் வெற்றி கண்டதாகத்தான் வரலாறுகள் சாற்றுகின்றன. விடுதலைப் போரில் ஏற்பட்ட உயிர் அழிவுகளினுல் சுடுகாடாகி அழிந்த நாடுகள் பற்றி வரலாறுகள் இல்லை.

மனிதம் எங்கே என்று கேட்கும் உங்கள் முதலைக் கண்ணீரால் தமிழ் மக்களுக்கு ஒருக்காலும் விடிவு கிட்டாது. கடலோடிகள் சென்ற வரலாற்றுக் காலங்களில் நாடு பிடித்து, அடிமைப்படுத்தி, சுரண்டி வாழ்ந்ததன் விளைவுதான் சிறுபான்மையினரின் இன்றைய அவல நிலைக்குக் காரணம். இந்த அவப் பெயரைத் தாங்கிய கடலோடிகளாகிய நீங்கள் ஏந்தி நிற்கும் கொலைக் கருவியாகிய சாண்டில் தமிழ் மக்களை மீண்டும் மீண்டும் அடிமைகளாக்கி அழிவுக்கே வழிகாட்டும் என்பதை சி. விக்குவின் விமர்சனத்திற்கு நீங்கள் அளித்த பதில் மூலம் பொதுமக்களாகிய நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

இலங்கைப் பாராளுமன்றத்தில் 30 ஆண்டுகள் வீற்றிருந்த மாக்சிய-லெனினிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமைகள் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பாக இருந்த சோல்பரியின் 29வது சரத்தையே மனிதாபிமானமின்றி அழிக்க உதவி தாங்களும் அழிந்து கொண்டார்கள். உங்களது எந்தத் தத்துவங்களும் இன்றைய நிலையில் தமிழ் மக்களுக்கு விடிவு தராது. ஒலமிடுதலைத் தவிருங்கள். பல தமிழ் மக்கள் இப்படிச் சிந்திக்கின்றனர். உங்களுக்கு எழுதி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை.

வாடன்சைட்

எஸ். சக்தி

விமர்சனங்கள் குதர்க்கமல்ல. வாசகர் கடிதங்கள் என்ற இப் பகுதி கேள்வி-பதில் பகுதியாக மாறாமலிருப்பதற்காக இத் தொடரை முடித்து வைக்கின்றோம். மனிதம் எங்கே? கட்டுரையும் அது பற்றிய வாசகர் விமர்சனத்திற்கான எமது விளக்கமும்தான் உங்களுக்கான பதிலுமாகும்.

— கடலோடிகள்

பல பிரபல்யமான பத்திரிகைகள் வாசகர் கடிதங்களை மட்டும் பிரசுரித்து விட்டு, வாசகர்களின் கடிதங்களிலுள்ள கருத்துகள் தங்களின் கருத்துகள் ஆகாதென நாகரிகமாகவும், நாசுக்காகவும் தெரிவித்து விடுவார்கள். அத்துடன் ஆசிரியர்களே நேரடியாகப் பதிலளிக்க வேண்டிய சந்தர்ப்பத்தையும் தவிர்த்து விடுவார்கள். இதன் மூலம் அவ்வாசகர் கடிதத்துக்கு இன்னொரு வாசகரே பதிலளிக்க வேண்டிய சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள். பன்னிரண்டாம் மாதத்து அரைகுறைத் தூண்டிலின் வாசகர் கடிதத்தையும் அதற்கான கடலோடிகளின் பதிலையும் அவசரமாகப் படித்தபின் எனக்கு மனதில் தோன்றிய எண்ணங்களின் பிரதிபலிப்பைத்தான் குறிப்பிட்டுள்ளேன். இவ்விதம் எல்லாக் கடிதங்களுக்கும் தூண்டில் ஆசிரியர் குழு தொடர்ந்து பதிலளிக்கும்போது தூண்டிலின் தனித்தன்மை, அதன் குரல் ஆகியவை நாளாவட்டத்தில் அடிபட்டுப்போகும் என்பதுடன் வேறு பல நல்ல விடயங்களுக்கும் தூண்டிலில் இடமில்லாமல் போய்விடும்.

தமிழர்களது பிரச்சனையென்பது தனிநாட்டுக் கோரிக்கையாயிருந்தாலென்ன, தனிநபர் பிரச்சனையாயிருந்தாலென்ன புரையோடிய புண்ணின் கதைதான். ஒரு பக்கத்தை நாம் மூட எண்ணும்போது இன்னொரு பக்கத்தால் வேறு விடயம் பீறிட்டுக் கிளம்பும். தற்போது வாசகர் கடிதப் பகுதியில் பீறிட்டுள்ள பிரச்சினையும் இவ்விதமான ஒன்றுதான். இன்று நாம் நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான கேள்வி, கலாச்சாரத்தில் என்றாலென்ன, அரசியலில் என்றாலென்ன, மதப் பண்பாடுகளில் என்றாலென்ன நாம் நாகரிகமானவர்களா?

ஆகவே தூண்டில் ஆசிரியர் குழுவும் மேற்கொண்டு வெளியிடப் போகும் பிர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திகளில் இவ்விதமான அநாகரிக தர்க்கங்களை விட்டு தனது தனிக் குரலுடன் வெளிவருவதில் அக்கறை கொள்ள வேண்டும் என்பதே அதன் வாசகன் என்ற முறையில் எனது அவா.

காடெக்ஸன் எம். குணரத்தினம்

பதிலளிக்க வேண்டிய விமர்சனங்களிலிருந்து ஆசிரியர் குழு தப்பித்துக் கொள்வது நாகரிகமானதல்ல. உங்கள் ஆலோசனைகளையும் கருத்தில் எடுக்கிறோம்.

— கடலோடிகள்.

'சிலைகள்' என்ற கவிதையின் உள்ளார்த்தத்தை ஓரளவு விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தாலும் வசனநடை கருத்தைத் திசை திருப்பக் கூடிய சந்தர்ப்பங்களே அதிகமாய் உள்ளன. ஆக்கதாரர் இக் கவிதையானது என்ன கருத்தை மையமாக வைத்து எழுதப்பட்டது என்பதையும் தெளிவுபடுத்தினால் நன்றாக இருக்கும்.

பிறக்கல் இளஞ்செழியன்

எங்களைப் பற்றி நாங்கள் என்ற தலைப்பில் ஊண்டிலார் தமது கொள்கைகளை வெளிப்படுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது. "ஓ விபச்சாரிக்கு" உடையுடுத்து ஓவியம் தீட்டியிருந்தால் அதனுள்ளும் ஓர் பண்பாடு மிளிரும்.

காகன் நிருபா நாகலிங்கம்

உண்மைகள் என்றும் நிர்வாணமானவையே.

— கடலோடிகள்.

ஊண்டிலின் ஒரு வருட நிறைவிற்கு வாழ்த்துகளும், பாராட்டுகளும். ஊண்டிலில் சிக்கிய பல விடயதானங்கள் மிகவும் பயனுள்ளதாகவே இருந்தன. குறிப்பாக கட்டுரைகள் இங்குள்ளவர்களைச் சிந்திக்கத் தூண்டுபவையாக அமைந்துள்ளன. கவிதைகள் குறிப்பாக அம்பலவன் புவனேந்திரன், சேரன், காங்கேசன் கோவிந்தகுமாரது கவிதைகள் சிறப்பாக அமைந்துள்ளன. இதுபோல இனிவரும் காலங்களிலும் ஊண்டில் சிறந்து விளங்க ஆதரவு என்றென்றும் உண்டு.

குன்சென்கௌஸன் ந. சிறீதரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாண்டில் கலம் ஒன்றிலிருந்து கலம் பன்னிரண்டு வரை படிப்படியான பரிணாமம் எய்தியிருக்கிறது. சிறுகதை, கவிதை, செய்திகளாக வந்து கொண்டிருந்த தாண்டிலில் மாக்சிச. லெனினிச அடிப்படையில் கட்டுரைகள் சிக்கின. இவற்றுக்குப் பின்பு தாண்டில் ஆசிரியர்கள் மேற்கூறப்பட்ட 'தத்துவக்' கோட்பாடுகளில் சற்றுக் கவனமெடுக்கத் தொடங்கியதால், அத் தத்துவ அடிப்படையில் எழுதப்படும் கட்டுரைகள் யாவற்றையும் மேலெழுந்தவாரியாக அலசிவிட்டு பிரசுரம் செய்தார்கள். இதனால் அவர்கள் எழுதும் ஆசிரிய தலையங்கங்களுக்கு நேரெதிரான கருத்துகளைத் தாங்கி சில கட்டுரைகள் வெளியாகியுள்ளன.

மனிதாபிமானம், மனித நேயம், மனிதம், அமைதி, சமாதானம் இவையெல்லாம் தனிமனிதனின் அடிப்படை ஒழுக்கங்கள். மனித மனங்களில் எழுகின்ற எண்ணங்கள் தாம் வெளிப்புறத்தே செயல்களாக விரிகின்றன. சமுதாய மாற்றமானாலும் மற்றெந்த மாற்றமானாலும் முதலில் மனதில் தோன்றி, அவை எண்ணங்களாகப் பரிணமம் அடைந்து, தனக்குள்ளே மாற்றமடைந்து; மனமாற்றமாகி, புற மாற்றத்திற்கு வித்திடுகிறது. 'சமுதாயத்தில் நிகழும் புரட்சிகளுக்கும் சமுக மாற்றத்திற்கும் காரணமே மனமாற்றம்தான்' என தத்துவஞானியான ஜேம்ஸ் ஆலன் தனது நூல்களில் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கருத்தை சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு முன்பே 'உபநிடதம்' ஆராய்ந்து கூறிவிட்டது.

இவை இப்படியிருக்க முதலாளித்துவத்தில் அமைதி, சமாதானம் கிடைக்காது. கம்யூனிசத்தில்தான் கிடைக்கும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாததொன்று. இப்படி பல முரண்பாடுகளை தாங்கி தாண்டிலில் கட்டுரைகள் வருவது ஆக்கதாரர்களுக்குக் கொடுக்கும் சுதந்திரம் என்றாலும் அவை ஒரு நிதானப் போக்கையும், மெய்ப்பாட்டையும் ஒத்திருக்க வேண்டும்.

தாண்டில் அரசியல் விழிப்புணர்வை மட்டும் நிகழ்த்தாது தன்னை இன்னும் விசாலப்படுத்தி இலக்கிய சேவையும் செய்கிறது. தாண்டிலில் வெளிவரும் தொடர்நவீனமும், சிறுகதைகளும் நம்நாட்டின் சுமைகளை படம் பிடித்துக்காட்டுவது மாத்திரமன்றி சில நியாயமான வாதங்களையும் எடுத்து வைக்கின்றன. வேர்களில் முழுக்கவும் நம்பிக்கை வைக்காது விழுதுகளின் துணையுடன் 'கனவை மிதித்தவன்' வருகிறது.

நூறன்பேர்க் ப. வி. சிறீரங்கன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மார்க்சிசம் ஒரு சமூகவிஞ்ஞானம்

- பிடப்

'தூண்டில்' பதினொராவது கலத்தில் ப.வி.சிறிரங்கன் மாக்சின் கோட்பாடுகள் மனித இனத்தின் பிரச்சினைக்கு முடிவான தீர்வைச் சொல்லிவிட்டதா? மாக்சின் கணிப்புகள் சரியென நிரூபிக்கப்பட்டு விட்டனவா? எனக் கேள்விகளை எழுப்பி மாக்சின் கொள்கைகள் பல அவர் வாழ்ந்த காலத்துக்கு சரியானவையாக இருக்கலாம், ஆனால் அவரின் கருத்துகளில் பல தற்காலத்தில் புதைகுழியை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

மாக்சிசம் ஒரு சமூக விஞ்ஞானம் என்பதை புரிந்து கொள்ள முடியாதோராலும், புரிந்தும் ஏற்க முடியாதோராலும்தான் இத்தகைய முடிவுகட்கு வர முடியும். மனிதகுல வரலாறானது தோற்றத்திலேயே தனிச் சொத்துடைமையை அடிப்படையாகக் கொண்டது. அதற்கு இயக்கமோ, மாற்றமோ கிடையாது. இதுதான் உலக வரலாற்றின் மிகச் சிறந்த சமூகம் என்ற கருத்துக்களைக் கொண்ட கருத்து முதல்வாத தத்துவங்களிடையேயிருந்து அதை எதிர்த்து அவற்றுக்கு நேர் எதிரான கருத்தை முன் வைத்தது தான் மாக்சிசம். கருத்து முதல்வாதமென்பது எந்த ஒரு பொருளுக்கும் இயக்கம் கிடையாது, எமது சிந்தனைகள்தான் புறச் சூழ்நிலையைத் தீர்மானிக்கின்றன என்பதே. இவற்றுக்கு மாறாக பொருட்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன, புறச் சூழ்நிலையால்தான் எமது சிந்தனைகள், செயற்பாடுகள் தீர்மானிக்கப்படுகின்றன என்ற பொருள்முதல்வாத தத்துவம் வரலாற்றில் விஞ்ஞான சிந்தனைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். மாற்ற முடியாத தன்மையுடன் கூடி நிற்பது இயக்கம் ஒன்றுதான் என்பதனை இது நிரூபித்தது. எந்த ஒரு விடயமும் நாமாக நினைத்துச் செய்வதில்லை. சூழ்நிலைகள்தான் எம்மைச் செய்யத் தூண்டுகின்றன.

## மாக்சிசம் வரலாற்றுக்குச் செய்தது என்ன?

சமூக அமைப்பு முறை பற்றி மாற்ற முடியாது, தானாகவே பிறந்தது தானாகவே அழியும், இதைவிட மேன்மையானது எதுவுமில்லையென்ற கருத்து முதல்வாதக் கருத்துகள் நிலவி வந்த வேளையில் அவற்றின் குழப்பம் மிக்க தன்மையையும், உண்மைக்குப் புறம்பான போக்கையும் எதிர்த்து இயக்கவியல் ரீதியிலான போதனையை முன் வைத்தது. மனித சமுதாயம் பொதுவுடமைச் சமுதாயத்தில் தோற்றம் பெற்று வளர்ச்சிப் போக்கிலேயே தனியுடமையை அடைந்தது. அதன் அழிவில் மீண்டும் அதன் சமூகத் தன்மை மாற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ப்பட்டு பொதுவுடமைச் சமுதாயமாக மாறும். அதனை எவ்வாறு மாற்றுவது என்ற கருத்தைத் தெளிவுபடுத்தியது. மாறிக்கொண்டும், வளர்ச்சி பெற்றுக் கொண்டுமிருக்கும் இயற்கையானது மனிதனுக்கு அப்பால் இருந்து வருகிறது. இவ் இயற்கையையே மனித அறிவு பிரதிபலிக்கின்றது. உதாரணமாக வளர்ச்சியடைந்த விஞ்ஞான நாடுகளிலும், வளர்ச்சியடையாத நாடுகளிலும் வசிக்கும் மக்களின் அறிவு வளர்ச்சி. இச் சமுதாய அறிவு சித்தாந்த, சட்ட ரீதியிலான, மத ரீதியிலான, அரசியல் ரீதியிலான கருத்துகளாக அமைந்து அவ்வமைப்பு முறையைப் பாதுகாக்கின்றது. இவையே அப் பொருளாதார அமைப்பு முறையைப் பாதுகாக்கின்றன. உதாரணமாக முதலாளித்துவ சமூகத்தில் ஜனநாயகம் என்பது என்ன? மக்களது உரிமைகளைப் பெறுவதற்கான, பாதுகாப்புக்கான ஓர் ஒழுங்கமைப்பு வடிவமென கல்விக்கூடமும், அரசாங்கமும் போதிக்கின்றன. ஜனநாயகம் என்பது அரச ஒடுக்கு முறையில் ஓர் ஒழுங்கமைப்பு வடிவம் என்ற உண்மையை மாக்சிசம்தான் வெளிப்படுத்துகிறது. இது முதலாளித்துவ நாட்டில் சுரண்டலையும், சுரண்டுவோரையும் பாதுகாத்துத் தானே நிற்கின்றது. சோசலிச சமூகத்தில் சுரண்டலை அறவே ஒழித்து, சுரண்டப்படுவோரது நன்மைகளைப் பேண முன்நிற்கிறது. ஒரு நாட்டின் பொருளாதார உற்பத்தி முறையைப் பாதுகாக்கவே அரசு, பொலிஸ், இராணுவம், நீதிமன்றம், கச்சேரி, வானொலி, தொலைக்காட்சி, கல்விக்கூடம் போன்ற அனைத்து நிறுவனங்களும் தானே நிற்கின்றன. இலங்கையிலோ, மேற்கு ஜேர்மனியிலோ, அமெரிக்காவிலோ மக்களது உழைப்பைச் சுரண்டி குறைந்த கூலி கொடுப்போரைத் தண்டிக்க சட்டமில்லை. ஆனால் சம்பளக் குறைவால், பசியால் மனைவி குழந்தைகளைப் பாதுகாக்க அரச காடுகளில் மிருக வேட்டையாடினால் அவனை தண்டிக்க வன பாதுகாப்பிலாகாவுக்கும், முதலாளியை எதிர்த்து சண்டை செய்தால் விலங்கிட பொலிசுக்கு சட்டமும், அதிகாரமும் உண்டு.

மூலதனம் எவ்வாறு உருவாகிறது? அதற்கு அடிஆதாரமாக திகழ்வது எது என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது. மதிப்பு பற்றிய உழைப்புத் தத்துவத்தைப் பற்றி பல கருத்துகள் நிலவி வந்ததை திருத்தியமைத்து பண்டத்தின் மதிப்பும், அதற்கான உழைப்புக்கும் இடையிலான தொடர்பை விளக்கி கூறியது. தொழிலாளர் குடும்பத்தைப் பாதுகாக்க கூலியைப் பெற ஒருபகுதி நேரத்தையும் மறு பகுதி நேரத்தில் சம்பளமின்றியே முதலாளி மேலதிக இலாபம் பெற, உபரி மதிப்பைத் தோற்றுவிக்கவும் உழைக்கின்றனர். உதாரணமாக அம்மியும், குழவியும் பொழிந்தெடுக்க ஒரு தொழிலாளிக்கு கூலி இருபது ரூபா. அக் கல்லுக்கான பொறியும், நில வாடகைக்கு ஆயுதங்களைப் பராமரிப்பதற்கான செலவும் முப்பது ரூபா. ஆனால் அம்மியினதும், குழவியினதும் விலை நூற்றி இருபது ரூபா. மேலதிகமான எழுபது ரூபா உபரி மதிப்பு எனப்படுகிறது. இவ்வாறு தோற்றம் பெற்ற மூலதனம் தொழிலாளர்கள், சிறு உற்பத்தியாளர்களை நசுக்கி வளர்கிறது. ஒருபுறம் முதலாளிகளினது கூட்டும், மறுபுறம் தொழிலாளர்களினது கூட்டும் வளர்கிறது. தொழிலாளர்களது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட்டு பெரிய சக்தியாகிறது. ஏனெனில் அவர்களின் பெருக்கமும், மூலதன அதிகரிப்பும் பின்னிப் பிணைந்தது. மூலதனத் திரட்சி அதன் உடன் பிறப்புகளான கூலி உழைப்பாளர்களினது வெற்றியை வெளிப்படுத்துகிறது." என்ற உண்மையை நிரூபிக்கிறது.

சமூகம் மக்களாக வாழ்ந்த நிலை மாறி சமூகச் சொத்துகளை அபகரித்த சுரண்டுவோர், பறிகொடுத்த சுரண்டப்படுவோர் என்ற வர்க்கப் போராட்டம்தான் சமூக நிகழ்வுகட்கும், வளர்ச்சிக்கும் அடிப்படை. இதில் முதலாளித்துவ, ஏகாதிபத்திய சமூகத்தில் மக்கள் விரும்பியதைச் செய்ய அதாவது விற்கவும், வாங்கவும் சுதந்திரம் உண்டு என்ற போலித் தன்மையை எதிர்த்து நின்றது. முதலாளித்துவ சமூகத்தை, சுரண்டலை போதனைகள், அறிவுரைகள் மூலமாக மாற்ற முடியுமென நம்பிய கற்பனை சோசலிஸ்டுகளான சமூக சீர்திருத்த வாதிகளின் கற்பனை சோசலிசத்தை தோலுரித்துக் காட்டியது. பலாத்காரமான யுத்தத்தின் மூலம் சமூகச் சொத்துடமைகள் பறிக்கப்பட்டு தனிச் சொத்துடமையாக மாற்றப்பட்டதிலே சுரண்டும் வர்க்கம், சுரண்டப்படும் வர்க்கம் என்ற பேதமும், போராட்டமும் உருவானது. எனவே இதற்கு தீர்வு காண சுரண்டப்படும் வர்க்கம் போராடி சுரண்டும் வர்க்கத்தை அடித்து, நொருக்கி அதன் மீது சுரண்டப்படும் வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தி வர்க்க பாகுபாடற்ற கம்யூனிச சமுதாயத்தை நோக்கி நகர வேண்டிய வர்க்கப் போராட்டம் பற்றிய போதனையை மனித குலத்திற்கும், வரலாற்றிற்கும் அளித்தது. சுரண்டப்படும் வர்க்கம் அமைதி, சமாதானம், மனிதாபிமானம், ஆன்மீகம் போன்றவற்றின் மூலமாக தனது உணர்வுகளை திசைதிருப்பியிருப்பதனை அகற்றி வர்க்க உணர்வையூட்டியது.'

(ஆதாரம்-வி.இ.லெனின், நூல் திரட்டு, தொகுதி 23, பக்கம் 40-48)

**மனித இனத்தின் பிரச்சினைக்கு முடிவான தீர்வைச் சொல்லிவிட்டதா?**

முதற் கூறிய விளக்கத்திலிருந்து இதனைக் கண்டு கொள்ள முடியும். மனித இனம் தன்மீது விதிக்கப்பட்டிருக்கும் அடக்கு முறைகளைத் தகர்த்து புதியதாக அமைக்கப்பட வேண்டிய அடிப்படைச் சமுதாய மாற்றம் தேவையென்பதனை உலகிற்கு வெளிப்படுத்தியது. கடந்த காலத்தில் சமுதாயம் எவ்வாறாக இருந்தது? இன்று எப்படி இருக்கிறது? நாளை அது எப்படி மாற்றியமைக்கப்பட வேண்டும்? அதற்குத் தேவையானவை என்ன? நாம் செய்யவேண்டியவை என்ன? என்பதனைக் கூறியதுடன் நின்றுவிடாது அமையவிருக்கும் சமுதாயத்தில் எழக்கூடிய பிரச்சினைகள், தீர்வு காண வேண்டிய வழி முறைகள் ஆகியவற்றையும் எமக்கு விட்டுச் சென்றுள்ளது. இவற்றின் அடிப்படையில் அமைந்த சோசலிச சமூக மாற்றங்கள், ஏகாதிபத்திய உலகில் நடைபெறும் நிகழ்வுகள் அவர் கூறியதை சரியென்று எமக்கு நிரூபித்து விட்டன. நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. அதனை நிகழ்கால, எதிர்கால பிரச்சனைகளுக்கேற்ப

www.tamilarangam.net

ஒழுங்கமைத்துத் தீர்வு காண வேண்டியதும், செழுமைப்படுத்த வேண்டியதும் தான் எமது கடமை.

முதலாளித்துவ அடிப்படையில் அமைந்த சமுதாய அமைப்பில் உருவாகும் எந்த ஊறுயதும் முடிவில் தன்னுடைய முரன்பாடுகளாலேயே அழிந்து போகும் என்பது மாக்சிய கண்ணோட்டத்தில் சரியானதே. இதில் என்ன தவற்றைக் காண்கிறீர்கள் என்பதனை தெளிவிப்பதன் மூலம் அதனை விளங்கப்படுத்த முடியும்.

பாட்டாளி வர்க்கம் ஒன்றுபட்டு எழும்போது நாட்டுக்குநாடு இடையேயுள்ள எல்லைக் கோடுகள் அழிந்து போகும் என்பது நிலப்புரப்பு ரீதியானதைக் குறிப்பிடவில்லை. அதன் தேசியத் தன்மைகளையே குறிப்பிடுகின்றது. பாட்டாளி வர்க்கத்திற்கு தாய்நாடு கிடையாது. ஏனெனில் அது உலகெங்கும் தன்னிடம் இழப்பதற்கு எதுவித சொத்துகளுமின்றி கூலியுழைப்பை விற்றே உயிர்வாழுகிறது. நாட்டுக்கு நாடு வளர்ச்சிப் போக்கில் வித்தியாசமிருப்பினும் அடிப்படை ஒன்றுதான். தேசிய ரீதியில் அதனிடையே பாகுபாடிருப்பினும் அது நிரந்தரமானதல்ல. மூலதனமானது ஒரு நாட்டிற்குரிய சக்தியல்ல. அது உலகரீதியிலான சக்தி. நிறுவனங்கள், வங்கிகள், பங்குச் சந்தைகள் போன்றவைதான் இன்று உலகை ஆட்டிப் படைக்கின்றன. இதை எதிர்த்துத்தான் எல்லா நாடுகளிலுமுள்ள பாட்டாளி வர்க்கமும் போராடுகின்றது. அதில் ஒரு பாகம்தான் தேசிய அரசுகளை எதிர்த்து நடைபெறும் போராட்டம். எனவே உலகத் தொழிலாளர் வர்க்கம் ஒன்றுபடும்போது அதன் எழுச்சி உலக மூலதனப் பொறியை எதிர்த்து நடைபெறுவதால் அதற்கு எல்லைக்கோடு கிடையாது.

மாக்சிசத்தை ஆதரித்து வளர்ப்பவர்களுக்கும், எதிர்த்து முறியடிப்பவர்களுக்கும் இடையிலான முரன்பாடுகளை தீர்க்கும் போராட்டத்தினூடாகத்தான் மாக்சிசம் வளர்கிறது. தத்துவார்த்தப் போராட்டத்திற்கு தூண்டில் சரியான இடமல்ல. அதன் நோக்கு நிலை வேறானது. இலகுவாக, நடுநிலையாக மக்களை உண்மையூட்ட விரும்புகிறது. எனினும் கலம் பதினொன்றில் வெளியான ப.வி. சிறிரங்கனின் கருத்தை எதிர்க்காமல் இருக்கவும் முடியவில்லை.

தூண்டிலின் வாசகர்கட்கு இயன்றவரை யதார்த்தமாகவும், விளங்கக் கூடியதாகவுமே இதனை எழுதியுள்ளேன். மாக்சிசம் மக்களிடையே பரிட்சயமாகாதவரை அது விளங்கக் கடினமானதுதான். இதுவரையான எமது போராட்டங்கள் அனேகமாக மக்களை வளர்க்கத் தவறிவிட்டன. தனிப்பட்ட சிலரது திறமைகளை வெளிப்படுத்த இது வரையப்படவில்லை. மாக்சிச திரிபு வாதங்களை மக்கள் புரிய வேண்டும், உண்மையை உணர வேண்டும், செயற்பட வேண்டும் என்ற உணர்வுடன்தான் இது எழுதப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(16ம் பக்கத் தொடர்ச்சி)

'ஜெய்ப்பூர் கால் திட்டத்தின்படி' கை, கால்களை இழந்து தவிப்பவர்களுக்கு செயற்கை கை, கால் பொருத்தப்படுகின்றது. இதன் மூலம் இவர்கள் தாழ்வு மனப்பான்மை நீங்கி சமூகத்தில் தன்னம்பிக்கையுடன் வாழ வழி வகுக்கப்படுகிறது.

இதே போன்றே அநாதரவாக விடப்பட்டு அல்லல்படும் சிறார்களை எடுத்து வளர்த்து அவர்களுக்கு மறுவாழ்வு வழங்குவதற்கு வடக்கு, கிழக்கு கிறிஸ்தவ பாதிரிமார் முன்வந்து நடவடிக்கை எடுக்கின்றனர். இவ்விதம் இன்னும் பல சமூக சேவை ஸ்தாபனங்கள் முன்வந்து பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இவர்களுக்கு மிகவும் முக்கியமாகத் தேவைப்படுவது நிதியாகும்.

இவ்விதமான சமூக சேவை ஸ்தாபனங்களுக்கு நிதி உதவியினை அளித்து அவர்களுக்கு கை கொடுப்பது வெளிநாடுகளில் வாழும் ஒவ்வொரு தமிழ் மகனினதும் கடமையாகும். இங்கு வாழும் எத்தனையோ பேர் தமது தாய் நாட்டுச் சிந்தனை சிறிதுமின்றி வீணே செலவுகள் செய்து பணத்தை வீண் விரயம் செய்து வருகின்றனர். இவ்விதம் வீண் விரயம் செய்யாமல் இது போன்ற சமூக சேவை ஸ்தாபனங்களுக்கு அனுப்பி வைத்தால் எமது மக்களினது துயரைத் துடைப்பதற்கு சிறிதளவு தன்னும் உதவி புரிந்ததாக இருக்கும். இங்குள்ள தமிழ்ச் சங்கங்கள், தமிழர் நலன்புரிச் சங்கங்கள் போன்றனவும் இவற்றில் பங்கு கொண்டு நிதியினைச் சேகரித்து பொதுநல ஸ்தாபனங்களுக்கு அனுப்பி வைத்தால் எமது மக்களுக்கு முற்றும் முழுதாக இல்லாவிடினும் சிறிதளவாவது உதவ முடியும் என்பது திண்ணம்.

---

### ஜெய நர்த்தனம்

கைகளில் துப்பாக்கி !
கால்களின் கீழே
சப்தமில்லாமல் மிதிபடுவது
சமாதானப் பூக்கள் !

ஒவ்வொரு நாளும்
உதிர்ந்து கொண்டிருப்பது
உயிர்கள் !

... ஷ.மேத்நா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

ஜனவரி 1989 கலம் : 13

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்கு பொறுப்பாளிகள்.

ஆசிரியர் குழு.......... கடலோடிகள்

வெளியீடு............ தென்னாசிய நிறுவனம்

முகவரி................. SÜDASIEN BÜRO
KIEFERNSTR 45
5600 WUPPERTAL-2
WEST GERMANY.
TEL. 0202 · 507156

முன் அட்டையில் ....

'என்ன நடக்கிறது?. சோகம் வடித்தெடுத்த முகத்தோடும், உளிபட்டு உரமான அகத்தோடும் நாங்கள். கதிரைச் சண்டையில் அண்ணன்மாருக்கு எங்கள் நினைவே இல்லை.' அழிவுகளைச் செரித்துக் கொண்டும், துன்பங்களைக் கொறித்துக் கொண்டும் அனுபவங்களைத் தின்று கொழுத்து நாமும் சிரிப்போம்.'

– சிவம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

(மாத சஞ்சிகை)

தூண்டிலைக் கிரமமாகப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கீழே உள்ள தென்னாசிய நிறுவன முகவரிக்கு வங்கி மூலமாக சந்தாப் பணத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)

6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)

6 மாதங்கள் - 25 டி.எம்.
1 வருடம் - 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

வங்கி கணக்கு இல. 268540
STADT SPARKASSE WUPPERTAL
BLZ 330 500 00

# SÜDASIEN BÜRO




KIEFERNSTR. 45
5600 WUPPERTAL·2
WEST GERMANY.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்